36 ஆண்டுகளைக் கடந்து

# அல்ஜன்னத்

இஸ்லாமிய மாத இதழ்

ஜனவரி 2026 / ரஜப் - ஷஅபான் 1447

மலர்: 28 இதழ்: 12

# الجنة

مجلة إسلامية شهرية

**ஆசிரியர்:**

S. கமாலுத்தீன் மதனி

+91 94434 53943 | skmadani@gmail.com

**துணை ஆசிரியர்கள்:**

M. அப்துர் ரஹ்மான் மன்பஈ

M. பஷீர் ஃபிர்தவ்ஸி

**இதழ் வடிவமைப்பு:**

‘1st Step’ இம்ரான்

**சந்தா விவரம்:**

தனி பிரதி ₹ 20

**ஆண்டு சந்தா:**

உள்நாடு ₹ 240 | வெளிநாடு ₹ 1100

**விளம்பர விவரம்:**

**முழு வண்ணப் பக்கம்**

பின் பக்கம் (ரேப்பர்) ₹ 8000

உள் பக்கம் (2வது ரேப்பர்) ₹ 6000

உள் பக்கம் (3வது ரேப்பர்) ₹ 5000

**கருப்பு வெள்ளை**

முழு பக்கம் ₹ 2000

அரை பக்கம் ₹ 1000

கால் பக்கம் ₹ 500

**தொடர்புக்கு:**

89409 38522 / 044 2852 8343

**Bank Details:**

A/c Name: Al Jannath | A/c No.: 782638522

Bank : Indian Bank

Branch : 403, Adhithanar Salai, Chennai - 2.

IFSC : IDIB000A090

**முகவரி**

61/26, அய்யாசாமி தெரு, புதுப்பேட்டை,

சென்னை – 600 002.

aljannath_monthly@yahoo.co.in

jaqhaljannath@gmail.com

www.jaqh.org

04 (ஈமானிய) நம்பிக்கைக்கு ஆபத்து எச்சரிக்கை !..
– தலையங்கம்

06 இந்திய அரசியலில் ஹிஜாப்
– ரஹ்மத்துல்லாஹ் ஃபிர்தவஸி

10 ஏகத்துவக் கொள்கையும் சமூகத்தின் நிலையும்
– அபுசிஹா

12 இறை நினைவு !
– சகீனா மஹ்மூதிய்யா பின்த் S.A. S.A. S.A.மரைக்காயர்

16 அல்லாஹ்வின் சத்தியம்
– முஹம்மது பாரூக்

22 வழிகெடுக்கும் சமூக வலைத்தளங்கள்
– முஹம்மது இர்ஃபான் (ஃபிர்தவ்ஸியா மாணவர்)

35 அழிவுகள் சோதனையா ? தண்டனையா ?
– மௌலவி யுனுஸ் தப்ரீஸ்

40 தீன் சுடர்கள்
இமாமுத்தீன் ஸங்கி
– அம்ர் பின் தாவுது



# (ஈமானிய) நம்பிக்கைக்கு ஆபத்து! எச்சரிக்கை!!

நம்பிக்கை என்பது உயிர் மூச்சு! அதற்காக ஒரு நம்பிக்கையாளன் தன் உயிரையே தியாகம் செய்ய முன் வருவானே தவிர, ஒருபோதும் அந்த நம்பிக்கையை விட்டுக் கொடுக்க மாட்டான். அந்த நம்பிக்கைக்கு பாதிப்பு ஏற்படுத்த யாராவது முற்படுவாரே யானால் அவர்களை எல்லா வகையிலும் எதிர்த்து நிற்பான். தன் நம்பிக்கையை பாதுகாக்க இறுதி மூச்சு வரை அறப்போராட்டத்தில் ஈடுபடுவான். தன் இதயத்தில் உள்ள நம்பிக்கையை பிடுங்க நினைப்பவன், தன் தந்தையாக இருந்தாலும் தான் பெற்ற பிள்ளையாக இருந்தாலும் மனம் தளராது அவர்களை எதிர்த்து நின்று அவர்களுக்கும் நம்பிக்கையின் அவசியத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் எடுத்துச் சொல்லிக் கொண்டே இருப்பான்.

அந்தப் பாதையில் மனம் தளராது பாடுபடுவான். காரணம், நம்பிக்கை எனும் ருசியை அவன் சுவைத்து விட்டான். அந்த நம்பிக்கைக்கு கிடைக்கும் மறுமை நற்பாக்கியங்களை தனது இதயக்கண்களால் கண்டு விட்டான். எனவே, இந்த மகத்தான பாக்கியம் மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என ஆசைப்படுவான். உண்மையான நம்பிக்கைக்கு எதிரான

இணை வைத்தல் என்பது எந்த ரூபத்தில் வந்தாலும் அதை உதறித் தள்ளி விடுவான். செயலால் ஆனாலும் சொல்லால் ஆனாலும் உள்ளத்தின் நம்பிக்கையால் ஆனாலும் அதற்கு ஒருபோதும் இடம் கொடுக்க மாட்டான். இறைவனுக்கு இணை வைத்தல் எனும் செயலை தன்னை கொன்று பொசுக்கும் விஷமாக பார்ப்பான்.

இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இறைத்தூதர்களும் அந்தத் தூதர்களின் பாசறையில் வார்த்தெடுக்கப்பட்ட தோழர்களும் இப்படிப்பட்ட தெளிவான பயிற்சியைப் பெற்றிருந்தார்கள். எவ்வளவு பெரிய ஆட்சி அதிகாரங்களை தங்கள் கையில் வைத்துக்கொண்டு அடக்குமுறைகளில் ஈடுபட்ட அக்கிரமக் காரர்களை எதிர்த்து நின்று போராடி னார்கள். இப்படிப்பட்ட தியாகப் போராட்டங்களை நாம் வாழும் நமது நாட்டிலும் நம்பிக்கையாளர்கள் மேற்கொள்ள வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நாட்டின் பூர்வீக குடிமக்களான இஸ்லாமியர்களை சதா குறி வைத்து நாட்டை ஆளுகின்ற ஆட்சியாளர்களும் அவர்களுடைய கைக்கூலிகளும் அவர்களின் அடையாளங்களை அப்புறப்படுத்தி அவர்களுக்கென உள்ள தனித்தன்மைகளை ஒன்றொன்றாக அழித்து வருகின்றனர்.

அடையாளச் சின்னங்களை அழிப்ப தோடு நின்று விடாமல் தற்போது முஸ்லிம்களின் உயிரை விட மேலான நம்பிக்கையில் கை வைக்க துவங்கி விட்டனர். இந்த நாட்டில் வாழ வேண்டுமானால் இந்த நாட்டின் தாயை வணங்க வேண்டும் இந்த நாட்டில் பெரும்பான்மைச் சமூகம் எதை வணங்குகிறார்களோ அதைத்தான் சிறுபான்மை சமூகமும் வணங்க வேண்டும் என்ற நிலை நாட்டில் உருவாக்கப்பட்டு விட்டது. இந்தப் பூமியை தாயாக சித்தரித்து அதை வணங்க வேண்டும் என்ற நம்பிக்கையை தாங்கியுள்ள “வந்தே மாதரம்” என்ற மந்திரத்தை அவசியம் எல்லா முஸ்லிம் களும் நம்ப வேண்டும் அதை பள்ளிக் கூடங்களில் பாட வேண்டும் என்று ஆட்சியை கையில் வைத்துக்கொண்டு ஆட்டம் போடுகின்ற அக்கிரமக்காரர்கள் கட்டயாப்படுத்துகின்றனர்.

இது சட்ட சபையில் சட்டமாக்கி உத்திரப்பிரதேச மாநிலத்தில் அமல் படுத்தப்பட்டுள்ளது. மதரஸாக்களிலும் இதை பாடியாக வேண்டும். இல்லை யென்றால் மதரஸா இழுத்து மூடப்படும். அபராதம் விதிக்கப்படும் என சட்டம் போடுகின்றனர். வந்தே மாதரம் என்பது தற்போது நாட்டின் நாடாளுமன்றத்தின் விவாத பொருளாக விவாதிக்கப்பட்டு கொண்டிருக்கின்றது. ஆட்டை கடித்து மாட்டை கடித்து இப்போது முஸ்லிம் களின் கொள்கையையே தகர்க்கத் துணிந்து விட்டனர். இந்த நாட்டில் வாழ்கின்ற முஸ்லிம்கள், இந்த நாட்டின் மீது பற்று கொண்டவர்கள் நாட்டு விடுதலைக்கும் இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கும் அரும்பாடு பட்டவர்களாவர். நாட்டின் மீது பற்று என்பது வேறு, நாட்டை வழிபட வேண்டும் என்று சொல்வது வேறு. இரண்டிற்கும் இடையில் மலைக்கும் மடுவுக்கும் இடையில் உள்ள வேறுபாடு உள்ளது. நாம் இந்த நாட்டு மக்கள். அதன் முன்னேற்றத்திற்கு பாடுபடு கிறோம். நம்மை படைத்து வளர்த்து இரட்சிக்கும் ஏக இறைவனை மட்டுமே வணங்கி வழிபடுவோம். ●



# இந்திய அரசியலில் ஹிஜாப்

– ரஹ்மத்துல்லாஹ் ஃபிர்தவ்ஸி

இந்திய அரசியலில் அவ்வப்போது ஹிஜாப் சர்ச்சை ஆக்கப்படுவது வாடிக்கையாகிவிட்டது இந்த நாடு வேற்றுமையில் ஒற்றுமை கண்ட நாடு என்று சொல்லிக்கொள்கிறோம். ஆனால் பல தனி மனித சுதந்திரம் பறிக்கப்பட்ட நிலையில் தான் நாம் வாழ்கிறோம். நாம் என்ன உண்ண வேண்டும் எதை உடுத்த வேண்டும் என்பதையெல்லாம் யாரோ நிர்ணயிக்கிறார்கள். நமது உடை உணவு உணர்வு என அனைத்தும் பாழ்படுத்தப்படுகிறது.

குறிப்பாக சிறுபான்மை மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் உணர்வுகளை ஆளக்கூடியவர்களே மதிப்பதில்லை என்பது தான் கவலைக்குரிய விஷயம். இதனால் கலகத்தை ஏற்படுத்த வேண்டும் என நினைப்பவர்களுக்கு அரசே நம் பக்கம் என்ற நிலையில் மோசமாக நடந்து கொள்வதை காணமுடிகிறது.

கடந்த சில வருடங்களுக்கு முன்னால் கல்விக் கூடங்களில் ஹிஜாப் அணியக் கூடாது என கர்நாடகா மாநிலத்தில் மிகப்பெரிய பிரச்சனைகள், வழக்குகள் எல்லாம் நடைபெற்று நீதிமன்றங்கள் வரை சென்றது. சில மாதங்களுக்கு முன் கேரள மாநிலத்தில் ஒரு பள்ளியில் ஹிஜாப் பிரச்சனையை பள்ளி நிர்வாகம் எழுப்பியது. அதை அரசு தலையிட்டு சரி செய்தது. இப்படியாக பல இடங்களிலும் இந்த நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கும் நிலையில் கடந்த டிசம்பர் 15ம் தேதி பீகார் முதல்வர் நிதீஷ் குமார் செய்த காரியம் உலகம் முழுவதும் சர்ச்சையானது பல கண்டன குரல்கள் உலகம் முழுவதிலுமிருந்து வந்தன.

பிகாரில் டிசம்பர் 15 ம் தேதி நடந்த நிகழ்ச்சியில் புதிதாக நியமிக்கப்பட்ட ஆயுஷ் மருத்துவரின் ஹிஜாபை அம்மாநில முதல்வர் நிதிஷ் குமார் கழற்றிய நிகழ்வு மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அவருடைய செயலை பார்த்து சிலர் சிரித்ததும் மத்திய மந்திரி ஒருவர் அதை ஆதரித்து பேசியதும் சமத்துவத்தை விரும்பக்கூடியவர்களின் மத்தியில் மிகப்பெரிய கவலையை ஏற்படுத்தியுள்ளது. மேலும் அந்த பெண் மருத்துவர் பணிக்கு செல்லவில்லை என்பது கூடுதல் செய்தி.

ஒரு நாட்டின் முதல்வர் அவர் எந்த கோட்பாட்டை சார்ந்தவராக இருந்தாலும் தனது ஆட்சியில் இருக்கும் மனிதர்களை மதிக்க வேண்டாமா?

சாதாரண மனிதர்களுக்கு தெரியக்கூடிய சபை நாகரீகம் தெரியாத ஒருவர் எப்படி மக்களை சரியாக வழிநடத்துவார்.

இது போன்றெல்லாம் ஒரு பெண்ணிடம் அநாகரீகமாக நடந்து கொள்ளும் போது அப்பெண்ணின் மன நிலை எப்படி பாதிப்படையும் என்று புரிய வேண்டாமா?

நீண்ட காலமாக முதல்வராக இருந்தேன் என்பதற்காக எதை வேண்டுமானாலும் செய்து விடலாமா?

இவர்களெல்லாம் தனக்கு வாக்களித் திருக்க மாட்டார்கள் அதனால் அசிங்கப் படுத்த வேண்டும் என்ற மன நிலையில் செய்தாரா அல்லது வயது மூப்பின் காரணமாக புத்தியில் ஏற்பட்ட பேதலிப்பா? இப்படி பல கேள்விகள் இருந்தாலும் மிகப்பெரிய வரலாற்றுப் பிழை இதை களைவார்களா கடப்பார் களா? காலம் பதில் சொல்லும்.

அரைகுறை ஆடைகளோடு பெண்களை போகப்பொருளாக மட்டுமே இந்த உலகம் பார்க்கிறது அதனால் பெண் களுக்கெதிரான குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. அதற்கான தீர்வு வழி முறையை தான் இஸ்லாம் சொல்கிறது.

பெண் மறைவானவள் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அவள் தன்னை மறைத்து செல்லும் போது பாதுகாப்பை பெறமுடியும் இது அனைத்து பெண்களுக்கமானது இதனால் பெண்கள் மட்டுமல்ல ஆண்கள் தவறான எண்ணங்களில் பெண்களை பார்ப்பது தடுக்கப்படும், கண்ணியமான எண்ணங்கள் ஏற்படும். இதனால் நமது உள்ளங்கள் தூய்மைப்படுத்தப்படும்.

இந்த ஹிஜாப் இறைவன் தன் அடியார் களின் கண்ணியத்திற்காக கட்டளை யிட்டது ஆகும். ஆடையற்ற அசிங்கமான வாழ்வியல் ஷைத்தானிய வாழ்வியல் இதனால் எந்த கண்ணியத்தையும் பெறமுடியாது.

கண்ணியத்தை குலைக்கும் விதமாக நடந்து கொள்பவர்கள் விரைவில் அவர் களின் கண்ணியத்தை இழப்பார்கள் அதில் எந்த மாற்றமும் இருக்காது.

يَٰبَنِيٓ ءَادَمَ قَدۡ أَنزَلۡنَا عَلَيۡكُمۡ لِبَاسٗا يُوَٰرِي سَوۡءَٰتِكُمۡ وَرِيشٗاۖ وَلِبَاسُ ٱلتَّقۡوَىٰ ذَٰلِكَ خَيۡرٞۚ ذَٰلِكَ مِنۡ ءَايَٰتِ ٱللَّهِ لَعَلَّهُمۡ يَذَّكَّرُونَ

**ஆதமுடைய மக்களே! உங்கள் மானத்தை மறைக்கக்கூடிய, (உங்களை) அலங்கரிக்கக்கூடிய ஆடைகளை நிச்சயமாக நாம் உங்களுக்கு அருள் புரிந்திருக்கிறோம். எனினும், (பாவங் களை மறைத்து விடக்கூடிய) இறையச்சம் எனும் ஆடைதான் மிக்க மேலானது. இவை அனைத்தும் அல்லாஹ்வுடைய வசனங்களாகும். (இவற்றைக் கொண்டு) அவர்கள் நல்லுணர்ச்சி பெறுவார்களாக!**

***(அல்குர்ஆன் : 7:26)***

يَٰبَنِيٓ ءَادَمَ لَا يَفۡتِنَنَّكُمُ ٱلشَّيۡطَٰنُ كَمَآ أَخۡرَجَ أَبَوَيۡكُم مِّنَ ٱلۡجَنَّةِ يَنزِعُ عَنۡهُمَا لِبَاسَهُمَا لِيُرِيَهُمَا سَوۡءَٰتِهِمَآۚ إِنَّهُۥ يَرَىٰكُمۡ هُوَ وَقَبِيلُهُۥ مِنۡ حَيۡثُ لَا تَرَوۡنَهُمۡۗ إِنَّا جَعَلۡنَا ٱلشَّيَٰطِينَ أَوۡلِيَآءَ لِلَّذِينَ لَا يُؤۡمِنُونَ

**ஆதமுடைய மக்களே! ஷைத்தான் உங்கள் தாய் தந்தையை (அவர்கள் இன்பமுடன் வசித்து வந்த) சொர்க்கத் திலிருந்து வெளியேற்றி (துன்பத்திற்குள் ளாக்கி)யது போல உங்களையும் துன்பத்திற்குள்ளாக்கிவிட வேண்டாம். அவர்களுடைய மானத்தை அவர் களுக்குக் காண்பிப்பதற்காக அவன் அவர்களுடைய ஆடையைக் களைந்து விட்டான். நிச்சயமாக அவனும் அவனுடைய இனத்தாரும் நீங்கள் அவர்களைக் காணமுடியாதவாறு (மறைவாக இருந்துகொண்டு) உங்களை (வழி கெடுக்க சமயம்) பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள். நிச்சயமாக நம்பிக்கை கொள்ளாதவர்களுக்குத்தான் அந்த ஷைத்தான்களை நாம் நண்பர் களாக்கி இருக்கிறோம்.**

***(அல்குர்ஆன் : 7:27)***

قُل لِّلۡمُؤۡمِنِينَ يَغُضُّواْ مِنۡ أَبۡصَٰرِهِمۡ وَيَحۡفَظُواْ فُرُوجَهُمۡۚ ذَٰلِكَ أَزۡكَىٰ لَهُمۡۚ إِنَّ ٱللَّهَ خَبِيرُۢ بِمَا يَصۡنَعُونَ

(நபியே!) நம்பிக்கையாளர்களான ஆண்களுக்கு நீர் கூறுவீராக: அவர்கள் தங்கள் பார்வையைக் கீழ் நோக்கியே வைக்கவும். அவர்கள் தங்கள் கற்பையும் பாதுகாத்துக் கொள்ளவும். இது அவர்களைப் பரிசுத்தமாக்கி வைக்கும். நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவற்றை நன்கறிந்தவன் ஆவான்.

*(அல்குர்ஆன் : 24:30)*

وَقُل لِّلۡمُؤۡمِنَٰتِ يَغۡضُضۡنَ مِنۡ أَبۡصَٰرِهِنَّ وَيَحۡفَظۡنَ فُرُوجَهُنَّ وَلَا يُبۡدِينَ زِينَتَهُنَّ إِلَّا مَا ظَهَرَ مِنۡهَاۖ وَلۡيَضۡرِبۡنَ بِخُمُرِهِنَّ عَلَىٰ جُيُوبِهِنَّۖ وَلَا يُبۡدِينَ زِينَتَهُنَّ إِلَّا لِبُعُولَتِهِنَّ أَوۡ ءَابَآئِهِنَّ أَوۡ ءَابَآءِ بُعُولَتِهِنَّ أَوۡ أَبۡنَآئِهِنَّ أَوۡ أَبۡنَآءِ بُعُولَتِهِنَّ أَوۡ إِخۡوَٰنِهِنَّ أَوۡ بَنِيٓ إِخۡوَٰنِهِنَّ أَوۡ بَنِيٓ أَخَوَٰتِهِنَّ أَوۡ نِسَآئِهِنَّ أَوۡ مَا مَلَكَتۡ أَيۡمَٰنُهُنَّ أَوِ ٱلتَّٰبِعِينَ غَيۡرِ أُوْلِي ٱلۡإِرۡبَةِ مِنَ ٱلرِّجَالِ أَوِ ٱلطِّفۡلِ ٱلَّذِينَ لَمۡ يَظۡهَرُواْ عَلَىٰ عَوۡرَٰتِ ٱلنِّسَآءِۖ وَلَا يَضۡرِبۡنَ بِأَرۡجُلِهِنَّ لِيُعۡلَمَ مَا يُخۡفِينَ مِن زِينَتِهِنَّۚ وَتُوبُوٓاْ إِلَى ٱللَّهِ جَمِيعًا أَيُّهَ ٱلۡمُؤۡمِنُونَ لَعَلَّكُمۡ تُفۡلِحُونَ

(நபியே!) நம்பிக்கையுள்ள பெண் களுக்கும் நீர் கூறுவீராக: அவர்களும் தங்கள் பார்வையைக் கீழ் நோக்கியே வைத்துத் தங்கள் கற்பையும் பாதுகாத்துக் கொள்ளவும். தங்கள் அலங்காரத்தில் (பெரும்பாலும்) வெளியில் இருக்கக் கூடிய (ஹிஜாபின் வெளிப்புறத்)தைத் தவிர எதையும் வெளிக்காட்டாது மறைத்துக் கொள்ளவும். தங்கள் முந்தானைகளால் மார்பையும் மறைத்துக் கொள்ளவும். பெண்கள் தங்கள் கணவர்கள், தங்கள் தந்தைகள், தங்கள் கணவர்களின் தந்தைகள், தங்கள் பிள்ளைகள், தங்கள் கணவர்களின் பிள்ளைகள், தங்கள் சகோதரர்கள், தங்கள் சகோதரர்களின் பிள்ளைகள், தங்கள் சகோதரிகளின் பிள்ளைகள் அல்லது (முஸ்லிமாகிய) தங்கள் இனத்தாரின் பெண்கள், தங்கள் அடிமைகள் அல்லது பெண்களின் விருப்பமற்ற தங்களை அண்டி வாழும் ஆண்கள், பெண்களின் மறைவான அவயங்களை அறிந்துகொள்ளாத சிறு பிராயத்தையுடைய (ஆண்) குழந்தைகள் ஆகிய இவர்களைத் தவிர மற்றெவர் முன்னும் தங்களின் அலங்காரத்தை அறவே வெளிப்படுத்த வேண்டாம். இன்னும் (தாங்கள் அணிந்திருக்கும் ஆடை ஆபரணங்களை போன்ற) மறைந்திருக்கும் தங்கள் அலங்காரத்தை அறிவிக்கும் நோக்கத்துடன் தங்கள் கால்களை (பூமியில்) தட்டித் தட்டி நடக்க வேண்டாம். நம்பிக்கை யாளர்களே! (இதில் எதிலும் உங்களால் தவறு ஏற்பட்டு விட்டால்) நீங்கள் வெற்றிபெறும் பொருட்டு பாவ மன்னிப்பைக் கோரி அல்லாஹ்வின் பக்கமே (உங்கள் மனதால்) திரும்புங்கள்.

*(அல்குர்ஆன் 24:31)*

*நீங்கள் அல்லாஹ்வையன்றி (வேறு எதனையும்) வணங்காதீர்கள். "நிச்சயமாக நான் உங்களுக்கு அச்சமூட்டி எச்சரிப்பவனாகவும், நன்மாராயம் கூறுபவனாகவும், நான் அவனிடமிருந்து (அனுப்பப்பட்டு) இருக்கிறேன்"*

*(அல்குர்ஆன்11.2)*

# உலகத்தின் ஹீரோ அஹ்மத்

ஆஸ்திரேலியாவின் போன்டை கடற்கரையில். டிசம்பர் ஞாயிற்றுக் கிழமையன்று ஹனுக்கா எனப்படும் யூத பண்டிகையை கொண்டாடுவதற்காக 1000க்கும் மேற்பட்டோர் கடற்கரையில் குவிந்திருந்ததாக காவல்துறை கூறுகிறது. அப்போது திடீரென கூட்டத்தினரை நோக்கி துப்பாக்கிச்சூடு நடந்தது. யூத சமூகத்தினரை குறிவைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக போலீஸ் கூறுகிறது.

இந்தத் தாக்குதலில் 10 வயது சிறுமி உட்பட 15 பேர் கொல்லப்பட்டனர். இறந்தவர்களில் பிரிட்டனில் பிறந்த 41 வயதான ஒரு நபர் மற்றும் பிரெஞ்ச் குடிமகன் ஒருவரும் அடக்கம். இஸ்ரேலிய குடிமகன் ஒருவரும் கொல்லப்பட்டதாக ஊடகங்கள் கூறுகின்றன.

இந்தத் தாக்குதல் நடைப்பெற்ற உடனே ஆஸ்திரேலியா அரசு மிகவும் நிதானமாக அதே நேரத்தில் துரிதமாக குற்றவாளி களை பற்றிய தகவல்களை தந்தது அது மட்டுமல்ல ஊடகங்களின் வயிற்று பசிக்கு இடம் கொடுக்காது அளவிற்கு சிறப்பாக நடந்து கொண்டது.

1000 பேர் கலந்த கொண்ட இந்த நிகழ்வில் நடத்த துப்பாக்கி சூட்டில் மிகப்பெரிய உயிரழுப்பை தனது உயிரை துச்சமாக மதித்து தடுத்து நிறுத்திய ஒருவர் இன்றைய உலகத்தின் கதாநாயகன் எல்லோரும் பயந்து நடுங்கி ஒலித்து ஓடிக்கொண்டிருக்கும் வேளையில் தைரியமாக குற்றவாளியை பிடித்து அவனின் துப்பாக்கியை பிடிங்கி மிகப் பெரிய உயிர்சேதத்தை தடுத்தார் அப்பொழுது இன்னொரு தீவிரவாதி அவரை சுட்டதில் அவர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பொதுவாகவே ஊடகங்கள் தீவிரவாத



செயல் நடந்தால் அதை செய்தவர் முஸ்லிம் தான் என்று ஆய்வு செய்யாமலே பரப்பி விடுவார்கள் ஆனால் இந்த தீவிரவாத செயலை தடுத்து நிறுத்தியவர் ஒரு முஸ்லிம் என்பதை தயங்கி தயங்கித்தான் வெளியிட்டன.

அவர்தான் அஹ்மத் அல் அஹ்மத் சாதாரண ஒரு பழ வியாபாரி மக்களை காக்க வேண்டும் என்பதில் தைரியமாக செயல்பட்டவர் ஆஸ்திரேலியாவின் பிரமதர் நீங்கள் தான் எங்களின் ஹீரோ மருத்துவ மனைக்கு சென்று சந்தித்து நன்றி தெரிவித்தார்.

இது தான் இஸ்லாம் மக்களை வாழ வைக்க வேண்டும், பாதுகாக்க வேண்டும், சிரமங்களை கலைய வேண்டும் என்பதை கட்டளையாகவே போதிக்கிறது. அதை தனது வாழ்வில் நடைமுறை படுத்திய அஹ்மத் அல் அஹ்மத் உண்மையிலேயே ஹீரோ தான்.

**இதன் காரணமாகவே “எவனொருவன் மற்றோர் ஆத்மாவைக் கொலைக்குப் பதிலாக அல்லது பூமியில் குழப்பத்தைத் தடை செய்வதற்காகவே தவிர (அநியாய மாகக்) கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் அனைவரையுமே கொலை செய்தவன் போலாவான். மேலும், எவன் ஓர் ஆத்மாவை வாழ வைக்கி றானோ அவன் மனிதர்கள் அனைவ ரையும் வாழவைத்தவன் போலாவான்.’**

***(அல்குர்ஆன் 5:32)***

# ஏகத்துவக் கொள்கையும் சமூகத்தின் நிலையும்

## அபு சிஹறா

இணைவைப்பு எனும் மாபெரும் அநீதிக்கெதிராக தொடர்ந்து களமாட வேண்டிய அவசியத்தில் உள்ளோம் இன்றைக்கு இஸ்லாமிய சமூகத்தில் இணைவைப்பை கோலாகலமாக நிறைவேற்றும் நிலை மீண்டும் அதிகரித்துள்ளது. முஹர்ரம் மாதம் முதல் ரஜப் வரை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் சந்தனக்கூடு, கொடியேற்றம் உரூஸ் கந்தூரி என்ற பெயரில் ஏதாவது ஒன்றை மார்க்கத்தின் பெயரால் நடத்திக்கொண்டிருக்கின்றனர் இக்கட்டுரை எழுதும் நேரத்தில் கூட சர்ச்சைக்குரிய சிக்கந்தர் தர்கா கொடியேற்றம் நடந்து வருகிறது.

சில நேரங்களில் நமது அடையாளச் சின்னங்களை பாதுகாக்கும் வகையில் இணைவைப்பு காரியங்களுக்கு வக்காலத்து வாங்கும் நிலைக்கு சமூகம் தள்ளப்படுகிறது, நோக்கதை தான் பார்க்க வேண்டும் என்ற அடிப்படையில் மார்க்கத்திற்கு முரணான காரியங்கள் நடக்கும் போது வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிறது இச்சமூகம் எவ்வளவு பெரிய ஆபத்தை ஆதரிக் கிறோம் என்பதை யோசிக்க வேண்டும்.

இணைவைப்பை தெரிந்து ஆதரித்தாலும் தெரியாமல் ஆதரித்தாலும் வேறு காரணம் என்ற பெயரில் ஆதரித்தாலும் அது பெரும்பாவம் தான்

ஒரு மனிதர் (நபி (ஸல்) அவர்களிடம் “அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்விடம் எந்தப் பாவம் மிகப் பெரியது?” என்று கேட்டார். அதற்கு அவர்கள், “அல்லாஹ் உன்னைப் படைத்திருக்க, அவனுக்கு நீ இணைவைப்பதுதான், (பெரும் பாவம்)” என்று பதிலளித்தார்கள்.

*அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு மஸவூத் ரலி; நூல்: முஸ்லிம் 142*

சமூக ஒற்றுமை முக்கியம் என்ற பெயரில் இணைவைப்பை ஆதிரிக்க முடியாது அப்படி ஆதரித்தால் அது வழிகேடு.

قُلْ يَٰٓأَهْلَ ٱلْكِتَٰبِ تَعَالَوْا۟ إِلَىٰ كَلِمَةٍ سَوَآءٍۭ بَيْنَنَا وَبَيْنَكُمْ أَلَّا نَعْبُدَ إِلَّا ٱللَّهَ وَلَا نُشْرِكَ بِهِۦ شَيْـًٔا وَلَا يَتَّخِذَ بَعْضُنَا بَعْضًا أَرْبَابًا مِّن دُونِ ٱللَّهِ فَإِن تَوَلَّوْا۟ فَقُولُوا۟ ٱشْهَدُوا۟ بِأَنَّا مُسْلِمُونَ

**(நபியே! அவர்களை நோக்கி) கூறுவீராக: “வேதத்தை உடையவர்களே! நமக்கும் உங்களுக்கும் ஒரு சமத்துவமான**



விஷயத்தின் பக்கம் வருவீர்களாக! (அதாவது) நாம் அல்லாஹ்வைத் தவிர வேறொன்றையும் வணங்கமாட்டோம். நாம் அவனுக்கு எதையும் இணையாக்க மாட்டோம். நம்மில் ஒருவரும் அல்லாஹ்வைத் தவிர எவரையும் இறைவனாக எடுத்துக் கொள்ளமாட்டோம்'' (என்று கூறுங்கள். நம்பிக்கையாளர்களே! இதையும்) அவர்கள் புறக்கணித்தால் ''நிச்சயமாக நாங்கள் முஸ்லிம்கள் (அவன் ஒருவனுக்கே வழிப்பட்டவர்கள்) என்று நீங்கள் சாட்சி கூறுங்கள்!'' என்று நீங்கள் கூறிவிடுங்கள்.

(அல்குர்ஆன் : 3:64)

இஸ்லாமிய சமூகத்தின் ஈடேற்றம் தவ்ஹீதில் உள்ளதே தவிர ஷிர்க்கில் இல்லை இணைவைப்பாளர் என்று தெரிந்தும் நாங்கள் பொதுவானவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் குற்றங்களை சுட்டிக் காட்டுவது கூட இல்லை முதல் உபதேசமும் முதல் எச்சரிக்கையும் ஷிர்க்கை பற்றியல்லவா இருக்க வேண்டும்.

وَلَقَدْ أَرْسَلْنَا نُوحًا إِلَىٰ قَوْمِهِۦٓ إِنِّي لَكُمْ نَذِيرٌ مُّبِينٌ

மெய்யாகவே நாம் 'நூஹை' அவருடைய மக்களிடம் (நம் தூதராக) அனுப்பி வைத்தோம். (அவர், அவர்களை நோக்கி) "நிச்சயமாக நான் உங்களுக்குப் பகிரங்கமாகவே அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறேன். (அல்குர்ஆன் : 11:25)

أَن لَّا تَعْبُدُوٓاْ إِلَّا ٱللَّهَ إِنِّيٓ أَخَافُ عَلَيْكُمْ عَذَابَ يَوْمٍ أَلِيمٍ

அல்லாஹ்வைத் தவிர (மற்றெதையும்) நீங்கள் வணங்கக் கூடாது. (வணங்கினால்) துன்புறுத்தும் நாளின் வேதனையை நிச்சயமாக நான் உங்களுக்கு அஞ்சுகிறேன்'' (என்று கூறினார்.)

(அல்குர்ஆன் 11:26)

இஸ்லாம் என்றாலே இறைவனை ஏகத்துவ படுத்துவது எனப்பொருள் ஆனால் வேறு வேறு பொருள்களை முற்படுத்தி தவ்ஹீத் பாழ்படுத்தப்படுவது தவ்ஹீதை முற்படுத்தாமல் இணை வைப்பை தவிர்க்காமல் ஈமான் இல்லை.

ٱلَّذِينَ ءَامَنُواْ وَلَمْ يَلْبِسُوٓاْ إِيمَٰنَهُم بِظُلْمٍ أُوْلَٰٓئِكَ لَهُمُ ٱلْأَمْنُ وَهُم مُّهْتَدُونَ

எவர்கள் நம்பிக்கை கொண்டு, தங்கள் நம்பிக்கையுடன் (இணைவைத்தல் என்னும்) அநியாயத்தையும் கலந்து விடவில்லையோ அவர்களுக்கே நிச்சயமாக பாதுகாப்பு உண்டு. அவர்கள்தான் நேர்வழியாளர்கள் (என்று கூறினார்).

(அல்குர்ஆன் : 6:82)

இன்றைக்கு முகஸ்துதிக்காக தங்களின் அடையாளத்தை மறைத்து பொதுச் சமூகத்தில் நாங்கள் இரண்டறக் கலந்து விட்டோம் என்ற நிலையில் இருந்தால் அதுவே இணைவைப்பிற்கு காரணமாக அமைந்து விடும் நான் உங்கள் மீது மிகவும் பயப்படுவது சிறிய இணை வைத்தலாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது நபித் தோழர்கள், "அல்லாஹ்வின் தூதரே! சிறிய இணை வைத்தல் என்றால் என்ன?" என்று கேட்டனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "ரியா (முகஸ்துதி)" என்று பதிலளித்தார்கள். "நீங்கள் உங்கள் அமல்களை உலகத்தில் யாருக்குக் காட்டுவதற்காகச் செய்தீர்களோ அவர்களிடம் செல்லுங்கள். அவர்களிடம் கூலி கிடைக்குமா என்று பாருங்கள்" என்று அடியார்களின் அமல்களுக்குக் கூலி கொடுக்கும் நாளில் அல்லாஹ் கூறி விடுவான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*(அறிவிப்பவர்: மஹ்மூத் பின் லபீத் (ரலி); அஹ்மத்: 23630, 22528)*

இணைவைப்பை விட்டு விலகி தவ்ஹீதின் பக்கம் வருவது சரி ஆனால் தவ்ஹீதை மறைத்து இணைவைப்பை வேறு காரணங்களை கூறி ஆதரிப்பதும் அங்கீகரிப்பதும் பெரும் பாவம் இப்பெரும்பாவத்திலிருந்து அல்லாஹ் நம்மை பாதுகாக்கட்டும்.

# இறை நினைவு!



**சகீனா மஹ்மூதிய்யா பின்த்**
S.A. **மரைக்காயர், சுரண்டை.**

**அல்லாஹ்வை நினைவு கூருவதாலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன.**
**(அல்குர்ஆன் 13:28)**

**என்னை நீங்கள் நினைவு கூறுங்கள் உங்களை நான் நினைவு கூறுகிறேன் இன்னும் நீங்கள் எனக்கு நன்றி செலுத்துங்கள் மேலும் எனக்கு மாறு செய்யாதீர்கள். (அல்குர்ஆன் 2:152)** என்று அல்லாஹ் தன் திருமறையில் கூறுகின்றான். ஆனால் இன்று பரபரப்பாக இயங்கி கொண்டிருக்கும் இவ்வுலகிலே நாமோ இறைவனை மறந்து இவ்வுலக இன்பங்களில் மூழ்கி கிடக்கின்றோம். இன்னும் அல்லாஹ்வை நாம் நினைவு கூர்ந்தால் அல்லாஹ் நம்மை நினைவு கூறுகிறான். இது எவ்வளவு பெரிய அருட்கொடை நம்மை படைத்த இறைவன் நம்மை நினைவு கூறுவதற்கு தயாராக இருக்கிறான் ஆனால் நமது நிலை......

நோயுற்றிருக்கும் ஒரு நோயாளி தனது உயிர் காக்க மருத்துவரிடம் செல்வான். மருத்துவரோ அவனுக்குசிகிச்சை அளித்து உயிர் பிழைக்க செய்து விடுவார் அதற்கான கூலியையும் பெற்றுக் கொள்வார் அத்துடன் அந்த மருத்துவருக்கும் நோயாளிக்குமான தொடர்பு முடிந்து விடும். ஒருவேளை நோயாளி கூட உயிர்காப்பாற்றிய மருத்துவரை மறக்காமல் காணும் இடங்களில் நன்றி சொல்வார். அல்லது நினைவு கூர்வார். ஆனால் மருத்துவம் மறந்து விடுவார். ஆம் அந்நோயாளியை நினைவு கூர்வதற்கு என்ன இருக்கிறது. அதனால் அவருக்கு என்ன பலன்?

மிகப்பெரிய செல்வந்தன் ஓர் வறியவருக்கு உதவி செய்தால் அதன் பிறகு அந்த வறியவனை நினைவு கூற என்ன இருக்கிறது? வறியவன் தான் செல்வந்தனை நினைவு கூர்வான்.

நம்மை படைத்த அல்லஹ் நமக்கு சுவாசிக்கும் காற்று முதல் உண்ண உணவு உடுத்த உடை தங்குவதற்கு இடம் உணவு, இவ்வுலகில் மகிழ்ச்சியாக

வாழ்வதற்கு குடும்பம், செல்வம் என்று மனிதன் வாழ்வதற்கு அத்துனை அருட்கொடைகளையும் வசப்படுத்தி தந்ததோடு தன்னை நினைவு கூர்ந்தால் தாமும் உங்களை நினைவு கூர்வதாக கூறுகின்றான்.

***முஃமின்களே! அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூறுங்கள். (அல்குர்ஆன் 33:41)***

அல்லாஹ்வை நினைவு கூருவது முமின்களின் ஒரு பண்பாகும். அல்லாஹ் தன் படைத்த அனைத்து படைப்பு களையும் விட்டுவிட்டு முஃமின்களை பார்த்து தன்னை நினைவு கூரும்படி கூறுகின்றான். அவனை நினைவுகூர்ந்து நாமும் முஸ்லிம்களாக ஆக வேண்டும். அல்லாஹ்வை நினைவு கூருவது என்பது வெறும் தஸ்பீஹை மட்டும் குறிக்காது வாயால் தஸ்பீஹ் செய்வது மட்டும் நினைவு கூருவதாகி விடாது. மாறாக உள்ளத்தினால் எந்த ஒரு செயலை செய் தாலும் அல்லாஹ் நம்மை பார்க்கிறான் இந்த செயல் சரியானதா? இது நமக்கு நன்மையா? என ஆராய்ந்து செயல் படுவதும் நினைவு கூருவதே ஆகும். இன்னும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்விடம் சில பிரத்தியேகமான வானவர்கள் இருக்கின்றனர் அல்லாஹ்வை நினைவு கூறும் சபைகளை தேடி செல்வார்கள் அந்த சபையை கண்டறிந்ததும் அங்கு செல்வார்கள் இறுதியில் சபை முடிந்து தன் இறைவனிடம் செல்வார்கள் அப்போது வானவர்களை பார்த்து அனைத்தையும் அறிந்தோனாகிய அல்லாஹ் எங்கிருந்து வருகிறீர்கள் என்று கேட்பான். அதற்கு வானவர்கள் உன்னை நினைவு கூறும் சபையில் இருந்து என்று கூறுவார்கள்.

பிறகு அனைத்தையும் அறிந்தோனாகிய அல்லாஹ் அவர்கள் என்னைப் பற்றி என்ன கூறினார்கள் என்று கேட்பான். அதற்கு வானவர்கள் உன்னை பரிசுத்த மானவன் கண்ணியமானவன் என்று புகழ்கின்றனர் என்று கூறுவார்கள். பிறகு அல்லாஹ் அவர்கள் என்னை பார்த்ததுண்டா என்று கேட்பான் அதற்கு வானவர்கள் உன் கண்ணியத்தின் மீது ஆணையாக அவர்கள் உன்னை பார்த்ததில்லை என்று கூறுவார்கள். பிறகு அல்லாஹ் அவர்கள் என்னிடம் எதைக் கேட்கின்றனர் இன்னும் எதை விட்டு பாதுகாப்பு கோருகின்றனர் என்று கேட்பான்.

அதற்கு வானவர்கள் உன்னிடம் சுவனத்தை ஆதரவு வைக்கின்றனர் நரகத்தை விட்டும் பாதுகாப்பு கூறுகின்றனர் என்று கூறுவார்கள் அதற்கு அல்லாஹ் அவர்கள் அதை பார்த்ததுண்டா என்று கேட்பான். அதற்கு வானவர்கள் இல்லை உன் கண்ணியத்தின் மீது ஆணையாக அவர்கள் அதை பார்த்ததில்லை என்று கூறுவார்கள். அப்போது அல்லாஹ் அவர்கள் கேட்டது அவர்களுக்கு கிடைக்கும் அவர்கள் எதை விட்டு பாதுகாப்பு கோறுகின்றார்களோ அதை விட்டு நான் அவர்களை பாதுகாத்து விட்டேன். இதற்கு நீங்களே சாட்சி என அல்லாஹ் வானவர்களிடம் கூறுவான் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

இவ்வாறு அல்லாஹ்வை நினைவுகூரும் சபைகளுக்கு வானவர்கள் செல்கின்றனர் இன்னும் அங்கு இருக்கக்கூடிய மக்களுக்கு சுவனத்தை நற்செய்தியாக கூறுகின்றனர் நரகத்திலிருந்து அல்லாஹ் யாரையெல்லாம் பாதுகாத்தானோ அதற்கு சாட்சியாகவும் இருக்கின்றனர். ஆனால் இன்றோ கடமையான தொழுகைக்கு கூட பள்ளிகளில் கூட்டத்தை காணவில்லை. விரல் விட்டு என்னும் அளவிற்கு மக்கள் வருகின்றனர் இன்னும் வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்கு கூட இமாம் மிம்பரில் ஏறிய பின் தான் பல மக்கள் பள்ளிக்கு வருகின்றனர்.

இன்னும் அல்லாஹ் தன் திருமறையில் தன்னை நினைவு கூரும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் தருவதாக கூறுகின்றான்.

**அல்லாஹ்வை அதிகமதிகம் நினைவு கூரும் ஆண்களும் பெண்களும் ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் தயார்படுத்தி வைத்துள்ளான். (அல்குர்ஆன் 33:35)**

இன்னும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் அல்லாஹ்வை நினைவு கூருகின்ற மனிதனுக்கும் அல்லாஹ்வை நினைவு கூராத மனிதருக்கும் உதாரணம் உயிருள்ளவனையும் இறந்தவனையும் போன்றதாகும். (ஆதாரம் : புகாரி)

இவ்வாறாக அல்லாஹ்வை நினைவு கூராதவர் இறந்தவருக்கு சமமானவர். எனவே நாம் அல்லாஹ்வை அதிகமதிகம் நினைவு கூர வேண்டும் இன்ஷா அல்லாஹ்.

இன்னும் அல்லாஹ் தன்னை நினைவு கூரும் அடியானை பற்றி கூறும்பொழுது என் அடியான் என்னைக் குறித்து என்ன எண்ணம் கொள்கிறானோ நான் அதற்கு ஏற்பவே உள்ளேன் அவன் என்னை நினைவு கூரும்போது நான் அவனுடன் இருக்கிறேன். அவன் என்னை மனதிற்குள் நினைவு கூர்ந்தால் நான் அவனை என் மனதிற்குள் நினைவு கூருவேன் அவன் என்னை ஓர் கூட்டத்தில் நினைவு கூர்ந்தால் நான் அதைவிட சிறந்த கூட்டத்தில் நினைவு கூருவேன் அவன் என்னிடம் ஒரு சான் நெருங்கி வந்தால் நான் அவனிடம் ஒரு முழம் நெருங்கி வருவேன் அவன் என்னை ஒரு முழம் நெருங்கி வந்தால் நான் அவனை நோக்கி ஒரு பாகம் நெருங்கி செல்கிறேன் அவன் என்னை நோக்கி நடந்து வந்தால் நான் அவன் பக்கம் ஓடி செல்கிறேன் என்று அல்லாஹ் கூறுவதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

இன்னும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒரு மனிதர் வந்து இஸ்லாத்தின் கடமைகள் நெறிமுறைகள் என்னை பொருத்தவரை மிகவும் அதிகமாகி விட்டது எனவே ஒரு விஷயத்தை எனக்கு அறிவித்து தாருங்கள் அதை நான் உறுதியாக பற்றி பிடித்துக் கொள்வேன் என்று கேட்டார். அதற்கு நபியவர்கள் உமது நாவு எப்பொழுதும் அல்லாஹுவை நினைவு கூருவதில் ஈரமாக இருக்கட்டும் என்று கூறினார்கள்.

(ஆதாரம்: திர்மிதி, இப்னு மாஜா)

எனவே நாம் அல்லாஹ்வை அதிகமதிகம் காலையிலும் மாலையிலும் நினைவு கூர வேண்டும்.

அன்றைய நபித்தோழர்கள் நன்மையை எவ்வாறு அதிகப்படுத்துவோம் மறுமையில் வெற்றி அடைவோம் எப்படி சுவனத்தை அடைவோம் என்று சிந்தித்து நன்மை செய்தனர் ஆனால் இன்றோ இன்றைய மக்கள் எவ்வாறு பணம் சம்பாதிப்பது எப்படி சுகமாக வாழ்வது என்று சிந்திக்கின்றனர். இன்னும் அல்லாஹ் தன்னை நினைவு கூர மட்டும் கூறவில்லை எவ்வாறு நினைவு கூர வேண்டும் என்றும் கூறுகின்றான்.

**நபியே உம் மனதிற்குள் பணிவோடும் அச்சத்தோடும் சப்தமின்றி காலையிலும் மாலையிலும் உம்முடைய இறைவனை நீர் திக்ரு செய்வீராக! மறதியாளர்களில் உள்ளவராக நீர் ஆகிவிட வேண்டாம். (அல்குர்ஆன் 7: 205)**

எனவே அல்லாஹ் எவ்வாறு தன்னை நினைவு கூர கூறினானோ அவ்வாறே நினைவு கூர வேண்டும்.

எவர் அல்லாஹ்வின் வேதத்திலிருந்து ஓர் எழுத்தை ஓதுகிறாரோ அவருக்கு அதன் பொருட்டால் ஒரு நன்மை உண்டு. அலிஃப் லாம் மீம் என்பது ஓர் எழுத்து என்று நான் கூறவில்லை மாறாக அலிஃப் ஒரெழுத்து லாம் ஒரெழுத்து மீம் ஓர் எழுத்து என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம் : திர்மிதி)

இன்னும் அல்லாஹ்வை யார் நினைவு கூரவில்லையோ அவர்கள் மீது அவனுடைய வேதனை வந்தடையும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் அல்லாஹ்வை நினைவுகூராத ஒரு சபையில் இருந்து விடை பெற்று செல்பவர்கள் நாற்றம் வீசும் ஒரு கழுதை பிணத்தை சுற்றி இருந்துவிட்டு பிரிந்து செல்வோரை போல் இன்றி அவர்கள் செய்யவில்லை அது அவர்களுக்கு கை சேதமாகவே அமையும். (திர்மிதி)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். எந்த ஒரு கூட்டத்தினரும் தாங்கள் அமர்ந்திருந்த இடத்திலிருந்து அல்லாஹ்வை நினைவு கூராமல் இருப்பார்களானால் அது அவர்கள் மீது நஷ்டத்திற்கு உரியதாகும் பிறகு அவன் நாடினால் அவர்களை வேதனையில் ஆழ்த்துவான்அவன் நாடினால் அவர்களை மன்னிப்பான்.

(ஆதாரம்: திர்மிதி)

எனவே அல்லாஹ்வை அதிகமதிகம் நினைவுகூர்ந்து ஈருலகிலும் நன்மையை அடைய அல்லாஹ் அருள் புரிவானாக இன்னும் ஒவ்வொரு காரியங்களையும் செய்யும்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுத் தந்தது போல் அல்லாஹ்வை நினைவு கூருவோம் இன்ஷா அல்லாஹ்.


بِسْمِ ٱللَّٰهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

**ஷோரூம்**

**கடை வேலைக்கு**

**ஆண்கள் / பெண்கள் தேவை**

**சம்பளம் : Rs. 24,000 - Rs. 35,000**

**சன் தையல் மிஷின் ஷோரூம்**

**T.நகர், சென்னை**

Scan to Apply

**Contact: Ph: 9-800-800-500**

**indiabeeps.com/job**

# அல்லாஹ்வின் சத்தியம்

- முஹம்மது பாருக்

அல்லாஹுத்தஆலா தனது திருமறையில் தன் மீது சத்தியம் செய்கின்றான். சில சமயம் தன்னுடைய படைப்பினங்களுள் குறிப்பிட்ட சிலவற்றின் மீது சத்தியம் செய்கின்றான்.

மனிதன் பொதுவாக சத்தியம் செய்வ தற்கு காரணம், தான் செய்தவற்றை உண்மை என பிறர் நம்ப வேண்டும் என்பதுவே. அவ்வாறு அவன் தகுதிக்கு தான் பெற்ற பிள்ளைகள் மீதோ, பெற்றோர்கள் மீதோ சத்தியம் செய்கின்றான். காரணம் சத்தியத்திற்கு பின் அக்கூற்றை உண்மையென பிறர் நம்ப வேண்டும் அல்லது ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே.

ஆனால் இறைவன் மட்டும் தான், தனது படைப்பினங்கள் மீது சத்தியம் செய்வான். இறைவனைத் தவிர வேறு எவரின் மீதும் சத்தியம் செய்ய மனிதனுக்கு உரிமையும், அனுமதியும் இல்லை என்று இப்னு அபி ஹாத்தம் கூறியுள்ளார்.

அதுபோல அல்லாஹ் தான் கூறும் உண்மைகள் பலவற்றை தனது படைப்பினங்களில் ஏதாவது ஒன்றின் மீது சத்தியம் செய்து அதன் தொடர் வசனங்களில் ஓர் உண்மை நிகழ்வுகளை யும், புறக்கணிக்கப்பட்ட அச்சமூகம் அழிக்கப்பட்டதையும், மனிதர்கள் பாவத்தில் புதைந்து கொண்டிருப்பதையும் சுட்டிக்காட்டி, படிப்பினை பெற்றுக் கொள்க! விழித்துக் கொள்க! அஞ்சிக் கொள்க! என எச்சரிக்கைவிடுக்கின்றான்.

மனிதன் இறைவனை நெருங்குவதற்கும், தூய்மையான வாழ்க்கையை மேற்கொள் வதற்கும் இதுபோன்ற சத்தியங்கள் வழி வகுக்கிறது.

## சத்தியத்தின் சான்றுகள்

அல்லாஹ் "மறுமை நாளின் மீது சத்தியமாக" என்பதினில் தொடங்கி மனசாட்சி, காற்று, காலை, மாலை, நட்சத்திரம், செம்மேகம், சந்திரன், மழை பொழியும் வானம், பூமி, சூரியன், காலத்தின் மீது... எனக் கூறிக்கொண்டே செல்வதைப்பார்க்கின்றோம். அதில் 100வது அத்தியாமான குதிரையைப் பற்றி ஆராய்வோம்.

"மூச்சுத் திணற அதிவேகமாக செல்லும் குதிரை மீது சத்தியமாக!" நெருப்பைக் கக்கும், அவை அதிகாலையில் பாய்ந்து செல்லும், புழுதியை கிளப்பும்" என அல்லாஹ் குதிரை மீது சத்தியம் செய்வது எதை வழியுறுத்துகிறது? என்பதாவது

மனிதன் குதிரைக்கு உணவாக வழங்கும் கொல்லும், புல்லும் மட்டும் தின்று, தனது அழகு, அற்பணிப்பு, கம்பீரம், வலிமை, பணிவு, வேகம் போன்ற அனைத்தையும் அவனுக்கே தியாகம் செய்யும் ஒரு உயர்ந்த விலங்காகும். காடு, மேடு, பள்ளம் பாலைவனம், நீரோட்டம், போரில் எதிரிகளால் தனக்கேற்படும் காயங்கள் என எதையும் பொருட்படுத்தாமல் தனது ஆற்றல்களை யும், தனது நன்றியையும் எசமானுக்கே செலுத்தக்கூடிய குதிரையை குறிப்பிட காரணம் என்ன? மனிதனை சாதாரண கலங்கிய இந்திரியத்துளியிலிருந்து படைத்து, அவனுக்கு அழகிய தோற்ற மளித்து, பூமியில் உலாவரச் செய்தது யார்? ஆனால் அவனோ குதிரையைப் போல நன்றி செலுத்தாமல், அர்ப்பணிப்பு இல்லாமல் உலக சுகங்களை மட்டுமே பிரதானமாக நேசித்து, படைத்த இறைவனை மறந்து விடுகிறான், என்பதை தெளிவுபடுத்தவே இங்கு குதிரையை குறிப்பிடுகின்றான்.

நாம் வேதத்தில் சத்தியம் செய்த குதிரையை மட்டும் பார்க்கின்றோம், அதில் சவாரி செய்கின்றோம், பயனடைகின்றோம். ஆனால் அவை நமக்கு நன்றி செலுத்துவதைப் போல, நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதில்லை என்ற அவ்விஷயத்தை உணர்த்தவே குதிரை மீது சத்தியம் செய்கின்றான்.

அதுபோல விடியற்காலையின் மீதும், பத்து இரவுகள் மீதும், ஒற்றை இரட்டையின் மீதும், நிகழ்கின்ற இரவின் மீதும், சத்தியமாக! என 89ம் அத்தியாயத்தில் சில சத்தியங்களை கூறி, வரம்பு மீறிய பலசாலியான ஆதுக்கூட்டம் அடைந்த வேதனைகள், கைகளால் மலைகளைக் குடைந்து வாழ்ந்த ஃதமுது மக்கள் அடைந்த வேதனைகள், ஆணிக்கார ஃபிரவுன் அழிக்கப்பட்ட நிகழ்வுகளைக் கூறி.... இவர்களையெல்லாம் அல்லாஹ் வேதனையெனும் சாட்டையைக் கொண்டு ஏன் சுழட்டி அடித்தான்? என்பதையும் நாம் வரலாற்றுச் சான்றுகள் மூலம் அறிய வேண்டும்.

## குர்ஆனை ஆராய்வோம்

ஒரு முறை, தாவூத் (அலை) அவர்களிடம் அல்லாஹ் “பயன் தரக்கூடிய அறிவு எது? என்பதை அறிந்துகொள்ளுங்கள்” என இவ்வாறு கூறினான்.

“என் வல்லமையைப் பற்றியும், பெருமையை பற்றியும் தெரிந்து கொள்வீராக! என் அதிகாரத்தை பற்றியும், அனைத்தையும் ஆட்கொண்ட என் ஆற்றலை பற்றியும் உணர்ந்து கொள்வீராக! இதுவே பயன் தரும் அறிவு. ஏனெனில் இதுதான் உம்மை என் அருகில் அழைத்து வரக் கூடியது “என்று அல்லாஹ் தாவூத் (அலை) அவர்களுக்கு அறிவை பற்றி விளக்கம் அளித்தான்” என்பதிலிருந்து பயன் தரக் கூடிய அறிவு எது? என்பது புலனாகிறது.

மனித வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றி அமைக்கின்ற இறைத் திட்டத்தின் மகிமையையும், அதன் உண்மையையும், கட்டளைகளையும் வழிகாட்டல்களையும் சட்ட வரம்புகளையும் ஆராய்ந்தால்... விடியல் தொலைவில் இல்லை, அருகில் தான் என்பதை உணர்த்தி, தைரியமூட்டி நமது கையைப் பிடித்து அழைத்துச் செல்வது குர்ஆனாகத்தான் இருக்கும்.

குர்ஆன் சத்தியமான வேதம் என்று நம்பக் கூடியவர்கள் தெளிவான அறிவுடையவர்களாவர். அதை நிராகரிப்பவர்கள் குருடர்கள் போன்றவராவார்கள்.

ஆக அல்லாஹ்வின் சத்தியத்தையும் அதன்பின் கூறப்படுகின்ற உண்மைகளையும் படித்து ஆராய்ந்து செயல்பட பணிக்கப்பப்பட்டுள்ளோம்.

அதையே 103வது அத்தியாயத்தில் “காலத்தின் மீது சத்தியமாக மனிதன் நஷ்டம் அடைந்து விட்டான்” என்ற உண்மையை கூறி யார்? யார்? அவர்களின் நஷ்டம் அடையாதவர்கள் எனவும் சத்தியமிட்டு நிறைவு செய்கின்றான்.

‘யார் உண்மையை அறியவில்லையோ அவர் வழி கெட்டவர். யார் உண்மையை அறிந்து அதை விட்டுவிட்டு வேறொன்றைத் தேர்ந்தெடுத்தாரோ அவர் அல்லாஹ்வின் கோபத்திற்குரியவர். யார் உண்மையை அறிந்து அதை பின்பற்றினாரோ அவர் அல்லாஹ்வின் அருளுக்குரியவர்.’ (இப்னு கய்யூம் ரஹ்)

முன் வாழ்ந்த நபிமார்கள் அனைவரும் மனிதர்கள் நேர்வழி பெற வேண்டி, அல்லாஹ்விடமிருந்து வந்த அறிவுரைகளையும், கட்டளைகளையும் தவறாமல் எடுத்தோதி வந்தார்கள். மாறாக சிலர் அக்கூற்றை ஏகடியம் செய்தனர் ,ஆராய மறுத்தனர், அதன் காரணமாக மாண்டனர். அதுபோல பெருமானார் (ஸல்) அவர்களின் உம்மத்துக்களாகிய நாமும் சத்தியமிட்டுக் கூறுவதை உண்மையென நம்ப வேண்டும், ஏற்க வேண்டும், பின்பற்ற வேண்டும் என இரட்சகன் விரும்புகிறான்.

# ஆதம் நபி (அலை)

# آدَمْ عليه السلام

رَبَّنَا ظَلَمْنَا أَنْفُسَنَا وَإِنْ لَمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُونَنَّ مِنَ الْخَاسِرِينَ

***“எங்கள் இறைவா! எங்கள் ஆன்மாக்களுக்கு நாங்கள் தீங்கிழைத்தோம். நீ எங்களை மன்னிக்கவில்லையெனில்; நீ எங்களுக்கு கருணை புரியவில்லையெனில் நிச்சயமாக நீங்கள் நஷ்டவாளிகளில் ஆகிவிடுவோம்”. (அல்குர்ஆன் 7:23)***

## ஆதம் நபியின் கதை

- பூமியில் அல்லாஹ் படைத்த முதல் மனிதர் மற்றும் முதல் நபி ஆதம் (அலை) ஆவார்கள். அவர்களை அல்லாஹ் மண்ணிலிருந்து படைத்தான்.
- ஆதம் நபிக்கு துணைவியாக ‘ஹவ்வா’ என்ற பெண்ணை அல்லாஹ் படைத்தான்.
- அவர்கள் இருவரும்தான் நம் அனைவரின் முதல் பெற்றோர்கள்.
- ஆதம் நபிக்கு எல்லாப் பொருள்களின் பெயர்களையும் அல்லாஹ் கற்றுக் கொடுத்தான்.
- ஆதம் நபியை கண்ணியப்படுத்தும் அடிப்படையில் அவர்களுக்கு சிரம் பணிய மலக்குகளுக்கும், இப்லீஸுக்கும் அல்லாஹ் கட்டளையிட்டான். மலக்குகள் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டனர். இப்லீஸ் கட்டுப்படவில்லை. ஆகவே, அவன் அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளானான்.
- ஆதம்ஹவ்வாவை சொர்க்கத்தில் பல வசதிகளுடன் அல்லாஹ் தங்க வைத்தான். ஒரு மரத்திற்கு மட்டும் செல்லாதீர்கள் என்று அவர்கள் இருவரையும் தடுத்தான்.
- ஷைத்தானுடைய ஆசை வார்த்தைகளைக் கேட்டு அவர்கள் இருவரும் அல்லாஹ் தடுத்த மரத்திற்கு சென்று அதன் பழங்களை சாப்பிட்டதால் கோபமுற்ற அல்லாஹ் அவர்களை சொர்க்கத்திலிருந்து பூமிக்கு இறக்கினான்.
- அவர்கள் தாங்கள் செய்த தவறுக்காக அல்லாஹ்விடம் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டார்கள். அல்லாஹ் அவர்களுக்கு பாவமன்னிப்பு வழங்கினான்.

பார்க்க: அல்குர்ஆன் வசனங்கள் (2:30,31) (3:59) (7:11) (7:19–23) (7:27) (7:189) (17:61)



# நிஜம் அல்ல நிழல்

– பாத்திமா ஆலிமா மஹ்முதிய்யா, சுரண்டை

“மின்னுவதெல்லாம் பொண்ணல்ல” இடத்திற்கேற்றார்போல் தன் இருப்பிடத்தை தனக்கானதாக தக்க வைத்துக் கொள்வதற்கு தன்னிறத்தை மாற்றிக் கொள்ளும் பச்சோந்தி போல, மக்கள் மத்தியில் தன்னை தலைசிறந்த தலைவனாக, மனிதனாக காண்பிக்கும் நம்மைப் போன்ற மனிதன் தான், நடிக்கும் கூத்தாடி.

அவன் தனக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பாத்திரத்திற்கு ஏற்ப தன்னை வேஷம் போட்டு தான் ஏற்றுக் கொண்ட வேடத்தை திரையில் நடித்து முடிப்பான். இது “நிஜம் அல்ல நிழல்”. அந்த வேடத்தில் நடிப்பதற்க்கு கூட வேடமிட பலர் சிகை அலங்காரம், உடல் அலங்காரம், உடை அலங்காரம் , நடை, உடை, பாவனை, பேச்சு, என்று எல்லாம் சொல்லிக் கொடுப்பதற்க்கு ஒவ்வொருவர்.

தன்னை சுற்றி நடக்கும் விஷயங்களுக்கு தன்னால் எதுவும் இயலாத புத்தி சுவாதினம் இல்லாத நிலையில் உள்ளவன் போல் இருப்பான். அவனுக்கு பெயர் (Hero) கதாநாயகன், தலைவன். அவன் செய்யும் முட்டாள் தனத்தைப் பார்ப்பதற்கு தன் உழைத்த காசை கொடுத்து முட்டாள் ஆகின்றனர் அப்பாவி மக்கள். இன்னும் சொல்ல போனால் இன்றைய இளைய தலைமுறையினர் தன் ரோல் மாடலாக அவனது நடை, உடை, பாவனை என்று தலை முடி முதல் அனைத்தையும் அவனுக்காக மாற்றிக் கொள்கின்றனர் அவனுக்கு ரசிகர் மன்றம், கட்சிக்கூட்டம், விழா என்று பசி, தூக்கம் இல்லாமல், இரவு, பகல் பாராமல் பாடுபடும் இளைஞர் கூட்டம் எத்தனை பேர். எத்தனை பெண்கள் தன் தந்தையை விட, தன் கணவனை விட, அவனே சிறந்தவன் என்கின்றனர்.

## அவர்களின் சிந்தனைக்கு:

நிழலில் (திரையில்) பெற்றோர் மீது பாசம் வைப்பது போல் நடிப்பான் – உண்மையில்..........?

உடன்பிறப்பிற்கு சொத்தை விட்டுக் கொடுப்பான் – உண்மையில் ..........?

உடன்பிறந்த சகோதரிகளிடம் பாசம் காட்டுவான் – உண்மையில் .........?

நிழலில் கட்டிய மனைவியை, பெற்ற பிள்ளைகளை கண்கலங்காமல் பாதுகாப்பான் – நிஜத்தில் ....?



ஏழை, எளிய மக்களுக்காகவும், நியாத்திற்காகவும் போராடுவான் – உண்மையில்.........?

குடிகாரனைக் கண்டிப்பான் குடியை வெறுப்பான் – நிஜத்தில் ........?

திரையில் தொழிலாளர் நலம் காப்பான் – உண்மையில் ....?

வயலில் இறங்கி வேலை செய்வான் – நிஜத்தில்........?

வீதியில் இறங்கி போராடுவான் – நிஜத்தில்........?

ஜாதிமதம் பார்க்க மாட்டான் உண்மையில் ஜாதி கட்சிக்குத் தலைவனாக இருப்பான்.

சட்ட ஒழுங்கை பாதுகாப்பது போல் நடிப்பான் நிஜத்தில் வருமான வரி கூட கட்ட மாட்டான்.

அவனுடைய சொல்லும், செயலும் திரைக்கு பின்னால் நிழலில்தான். நிஜத்தில் அவன் முகம் வேறு. தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பொய்யான வாக்குறுதிகளை கொடுத்து விட்டு வெற்றி பெற்ற பின் சுயநலமே கொள்கையாக கொண்டு மக்களை ஏரெடுத்தும் பார்க்காத அரசியல்வாதியும், திரையில் நடிக்கும் நடிகரும் ஒன்று. படித்து பெற முடியாத பட்டமும், பதவியும் நடித்து பெற முடியும் என்பதை உணர்ந்து நடிக்கின்றான். இதையறியா இளைஞர் கூட்டமோ நிழலை நிஜமாக நம்புகின்றனர். இப்படிப்பட்டவர்களா நம் (role model) முன்மாதிரி என்பதனை சிந்திக்க வேண்டாமா? இந்த இளைஞர் கூட்டம்.

அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறான். அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் ஆதரவு வைத்து அல்லாஹ்வை அதிகம் தியானிப்போருக்கு நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம் அழகிய முன்மாதிரி உங்களுக்கு இருக்கிறது. (அல்குர்ஆன் 33:21)

மேற்கண்ட வசனத்தில் அல்லாஹ் கூறியது போல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உலக மக்கள் யாவருக்கும் அழகிய முன்மாதிரியாகவே இருந்தார்கள். அவர்களின் ஒவ்வொரு சொல்லும் அவர்களின் செயலாகவே இருந்தது. அவர்கள் செய்யாத ஒன்றை ஏதும் சொன்னதில்லை. மேலும் அல்லாஹ் அவர்களுக்கு இட்ட கட்டளையை தம் சமூக மக்கள் அனைவருக்கும் வாழ்க்கை வழிகாட்டியாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்ததோடு தாணும் வாழ்ந்து காட்டினார்கள். அவருடைய வாழ்க்கை தன் மனோ இச்சையின் படி இல்லை. அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள், நபியவர்களின் வாழ்க்கை குர்ஆனாகவே இருந்தது.

(ஆதாரம் : புஹாரி)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை பின்பற்றிய சஹாபாக்களின் வாழ்க்கையும் அவர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையிலே இருந்தது. சொர்க்கத்தை பெறுவதற்காக தன் வாயிலே வைத்திருந்த பேரீத்தம் பழம் தொண்டைக்குள் இறங்குவதற்குள் போரிலே கலந்துகொண்டு தன் உயிர் துறந்த சகாபாக்கள் மற்றும் திருமண நாளிலே சொர்க்கத்தை பெறுவதற்காக போரிலே கலந்து கொண்டு தன் உயிரை தந்த (ஹன்லலா (ரலி). இஸ்லாமிய கொடியை வலக்கரம் தாங்கி அது வெட்டப்பட்டு பின்பு இடக்கரத்தில் ஏந்தி அந்த கையும் வெட்டப்பட்டு தன் வாயிலே கொடியை ஏந்தி (முஸ்அப் பின் உமைர் (ரலி) தன் உயிர் பிரியும் வரை உறுதியாக பிடித்த சஹாபி, இன்னும் அடுக்கடுக்காக எத்தனையோ நபித்தோழர்கள் நபி தோழியர்கள் தன் இன்னுயிரை துச்சமென கருதி ஷஹீதானவர்கள் எத்தனை எத்தனை பேர். இவர்களின் ஒரே குறிக்கோள் மறுமையில் வெற்றி பெற்று சொர்க்கத்தை வெல்வதுமே ஆகும். அதனால்தான் இன்னல்களை மன





நிறைவுடன் தாங்கிக் கொண்டார்கள் அதன் காரணமாகவே ஷஹீதுகள் சொர்க்கத்தின் பச்சைக்கிளிகளாக பறக்கும் அந்தஸ்தை பெற்றவர்கள்.

ஏழைத்தாயின் மகன் என்பவன் தன் மேக்கப்பிற்கு பல லட்சம் செலவழிப்பதும், படிக்காமலே பத்ம பூஷன், பத்மவிபூஷண், டாக்டர் பட்டம், நம்பிக்கை நாயகன், மக்கள் செல்வன், சூப்பர் ஸ்டார், சுப்ரீம் ஸ்டார், தல, தளபதி, இளைய தளபதி, என தனக்குத் தானே பட்டம் கொடுத்துக் கொண்டு நடிக்கின்றனர்.

இதனை எல்லாம் உண்மை என்று அவர்கள் தனக்காக பாடுபடுகின்றனர் அவர்கள் செய்வதெல்லாம் உண்மை என்று கண்முடித்தனமாக ஈர்க்கப்பட்டு அவர்களை போல் தன் வாழ்கையை மனோ இச்சைப்படி மாற்றிக் கொள்கின்றனர். இதனால் அவர்களுக்கு எந்த பயனுமில்லை.

அல்லாஹ் தன் திருமறையில் கூறுகின்றான்: **அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும் வேடிக்கையும் அலங்காரமுமே ஆகும். மேலும் அது உங்களுடைய பெருமை எடுத்துக் கொள்வதும் பொருட்களையும் சந்ததிகளையும் பெருக்குவதுமே ஆகும். இது மழையின் உதாரணத்துக்கு ஒப்பாகும் அதாவது அது முளைபிக்கும் பயிர் விவசாயிகளை ஆனந்தப்படுத்துகிறது. ஆனால் சீக்கிரமே அது உலர்ந்து மஞ்சள் நிறம் ஆவதை நீர் காண்பீர் பின்னர் அது கூளமாகி விடுகிறது. உலக வாழ்வும் இத்தகையதே எனவே உலக வாழ்வில் மயங்கியவருக்கு மறுமையில் கடுமையான வேதனை உண்டு. நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ்வின் மன்னிப்பும் அவன் பொருத்தமும் உண்டு. ஆகவே இவ்வுலக வாழ்க்கையை ஏமாற்றும் சொற்ப சுகமே தவிர வேறு இல்லை. *(அல்குர்ஆன் 57:20)***

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: மனோ இச்சைகளால் நரகம் சூழப்பட்டுள்ளது. சிரமங்களால் சொர்க்கம் சூழப்பட்டுள்ளது.

(அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி); ஆதாரம் : புகாரி)

எனவே இன்றைய மக்கள் நிழலை நிஜமென நம்பாமல் நிஜத்தை புரிந்து கொண்டு நிலையான வாழ்வை புரிந்து அதற்கான முயற்சிகளையும் செயல்பாடுகளையும் தம் வாழ்வில் கடைபிடித்து சொர்க்கத்தை பெறுவோமாக! இன்ஷா அல்லாஹ்!

**அன்புள்ள அல்ஜன்னத் இதழின் வாசகர்களே! எழுத்தாளர்களே!! இன்ஷா அல்லாஹ் பிப்ரவரி 2026 மாதத்தின் அல்ஜன்னத் இதழ் ரமளான் சிறப்பிதழாக வர இருக்கின்றது.**
**கட்டுரையாளர்கள் விளம்பரதாரர்கள் தங்கள் ஆக்கங்களையும் விளம்பரங்களையும் 15ஆம் தேதிக்குள் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.**
**வாட்ஸ்அப் எண் 9841200682, 9444223259**





# வழிகெடுக்கும் சமூக வலைத்தளங்கள்

– முஹம்மத் இர்ஃபான் (மதுரை)
மூன்றாம் ஆண்டு மாணவர், அல்ஜாமிஅதுல் ஃபிர்தௌஸியா அரபிக்கல்லூரி

சைத்தான் எனும் மாபெரும் வழிகேடன் மனிதர்களை வழி கெடுக்க பல யுக்திகளை கையாள்கிறான். அவற்றைக் கொண்டு மனிதர்களை வழிகெடுத்து தன்னுடைய வலையில் விழ வைக்கின்றான். குறிப்பாக இன்றைய காலத்தில் குழந்தை முதல் வயது முதிர்ந்தவர்கள் வரை வழி கேட்டின் நிலையில் இருக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று சமூக வலைத்தளங்கள்.

## ஆரம்பத்தில் இவர்கள் எவ்வாறு மூழ்கிவிடுகிறார்கள்?

இயல்பாகவே நாம் ஒரு குழந்தையிடம் ஒரு விஷயத்தை செய்யாதே! என்று சொன்னால் அந்த விஷயத்தை தான் செய்யும். உதாரணமாக: ஒரு இடத்தில் நாம் வைத்த ஒரு பொருளை தொடாதே என்று சொல்லும் பொழுது தான் அதை அந்த குழந்தை தொடும் அல்லது எடுக்கும். இது போன்ற காரியங்கள் தான் ஆரம்பத்தில் இயல்பாகவே இவர்களை செய்ய தூண்டுகிறது.

இப்பொழுது நமது தலைப்பிற்கு ஏற்றவாறு சொல்வதாக இருந்தால் ஒரு குழந்தையிடம் நாம் ஆரம்பத்தில் மொபைல் போனை எடுக்காதே அதில் பல தீங்குகள் இருக்கிறது கெட்டு விடுவாய் என்று பலமுறை சொன்னால அந்த குழந்தையின் உள்ளத்தில் அது ஆழமாக பதிந்து விடுகிறது. அது விவரம் தெரியும் வயது வரும் பொழுது அது என்னவாக இருக்கும் என்று சைத்தான் அவனை வழிகெடுத்து தன் பக்கம் ஈர்க்கிறான்.

## வழிகெடுவதில் ஆரம்ப குழந்தையின் நிலை

இன்றைய காலத்தில் குழந்தைகள் சமூக வலைத்தளங்களில் எந்த அளவிற்கு மூழ்கி கிடக்கிறார்கள் என்றால், ஒரு தாய் உணவு ஊட்டும் பொழுது phone இல்லாமல் ஊட்டுவதில்லை. அதைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது உணவளித்தால் அதை ஏற்றுக் கொள் கிறது. அதேபோல் தான் தூங்கும் பொழுதும் மொபைல் இல்லாமல் அந்த குழந்தை தூங்குவதில்லை. இந்த நிலைமை தான் சமுதாயத்தில் உள்ள பெரும்பாலான குடும்பத்தில் உள்ள குழந்தைகளின் நிலைமையாக இருக்கிறது.

## சமூக வலைத்தளங்களில் இளைஞிகள், இளைஞர்கள் மூழ்கடிப்பு

* இன்று சமூகத்தில் சமூக வலைத் தளங்கள் இல்லாமல் எந்த ஒரு இளைஞரும் இருப்பதில்லை அல்லாஹ் பாதுகாத்தவர்களை தவிர.

* இன்றைய காலகட்டத்தில் பல இளைஞர்கள் மற்றும் இளைஞிகள் சமூக வலைத்தளங்களை தவறாகத் தான் பயன்படுத்துகிறார்கள்.

* பெரும்பாலும் இவர்கள் மூழ்கும் வலைத்தளங்கள்

* Game, Rummy, Instagram, Facebook, Snap-chat, போன்ற இந்த வலைத்தளத்தில் பெரும்பாலும் இளைஞர்கள் மற்றும் இளைஞிகள் மூழ்கி, ஒரு ஆணாக இருந்தால் ஒரு பெண்ணோடும் ஒரு பெண்ணாக இருந்தால் ஒரு ஆணோடும் தவறாக தொடர்பு கொண்டு ஹராமான செயல்களில் ஈடுபடும் செய்திகள் பரவலாக காணப்படுகிறது.

ஆணாக இருக்கட்டும் அல்லது பெண்ணாக இருக்கட்டும், இருவரும் தவறான முறையில் மிக நெருக்கமாக பழகி பிறகு அந்த தவறான தொடர்பால் அவ்விருவர்களுக்கு மத்தியில் அந்த தொடர்பு முறிக்கப்படும் பொழுது தற்கொலைக்கு ஆளாகிவிடும் சூழ்நிலை இன்று நாம் தினம் தினம் செய்தித் தாளிலும் அதே சமூக வலைத்தளங் களிலும் பார்க்கிறோம்.

**قال الله تعالى: ولا تقربوا الزنا انه كان فاحشه وساء سبيلا (بني اسرائيل ٣٢)**

அல்லாஹ் விபச்சாரம் செய்யாதீர்கள் என்பதாக குறிப்பிடாமல் அதற்கு வழி வகுக்கும் பக்கமே நெருங்காதீர்கள் என்றுதான் குறிப்பிட்டுள்ளான்.

சமூக வலைத்தளத்தில் பல தீமைகள் இருக்கிறது அதன் பக்கம் நெருங்காமல் இருப்பது நம்மீது கடமை. சமூக வலைத்தளங்களை பயன்படுத்தவே கூடாது என்று சொல்லவில்லை. அது நன்மையான விஷயங்களுக்கு நாம் பயன்படுத்த வேண்டும்.

இதற்கு உதாரணமாக ஒரு ‘கத்தி’.

* ஒரு கத்தியை எதற்கு பயன்படுத்து கிறோம் என்பதைப் பொறுத்துதான்.

இதுபோல் சமூக வலைத்தளத்தை நல்ல விஷயங்களுக்காக பயன்படுத்துவதற்கு நம்மிடம் சுய கட்டுப்பாடு இருப்பது கடமை.

* இந்த தவறான தொடர்பு சமூக வலைத்தளத்தில் எந்த அளவிற்கு ஆகிவிட்டது என்றால்,

உள்நாட்டிலிருந்து வெளிநாட்டில் இருக்கும் ஏதாவது ஒரு அந்நிய ஆணையோ அல்லது பெண்ணையோ தொடர்பு கொண்டு வெளிநாடு சென்று திருமணம் முடித்து வரும் ஒரு நிலைமையை இன்று நாம் பேஸ்புக்கில் பரவலாக காணலாம்.

மேலும், மார்க்கம் பெண்கள் தங்கள் அவுரத்தை அந்நிய ஆண்களிடம் பகிரங்கப்படுத்த கூடாது என்று சொல்லி இருக்கின்றது.

**قال الله تعالى: قل للمؤمنات يقضون من ابصارهن ويحفظن فروجهن ولا يبدين زينتهن (النور ٣١)**

அல்லாஹ் கூறியிருந்தும், சமூக வலைத் தளங்களில் பகிரங்கமாக போட்டோக் களையும் வீடியோக்களையும் பதிவிட்டு நடனம் ஆடுவது போல் பகிர்கிறார்கள் பெண்கள்.

மேலும் Rummy Circle-ல் இளைஞர்கள், நடுநிலை வயதுடையவர்கள் மேலும் வயது முதிர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் அனைவரும் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இதில் கிடைக்கும் பணம் ஹராமான வழியில் கிடைத்தது.

இதில் தோல்வி அடைந்து பணத்தை இழந்து பல மனிதர்கள் தற்கொலையில் விழுந்து விடுகிறார்கள் கடனிலும் மூழ்கி கிடக்கிறார்கள். இதற்காக வரும் விளம்பரத்திலும் இது அபாயம் இதிலிருந்து பாதுகாப்பாக இருங்கள் என்று குறிப்பிட்டும் அவர்களே விளையாட ஆர்வமூட்டுகிறார்கள்.

**قال الله تعالى: انما الخمر والميسر والانصاب والازلام رجس من عمل الشيطان فاجتنبوه لعلكم تفلحون. (مائده ٩٠)**

***நம்பிக்கையாளர்களே! நிச்சயமாக மது, சூதாட்டம், சிலை வணக்கம், அம்பெறிந்து குறி கேட்பது ஆகிய இவை ஷைத்தானுடைய அருவருக்கத்தக்க வேலைகளில் உள்ளவையாகும். ஆகவே, இவற்றில் இருந்து நீங்கள் விலகிக்கொள்ளுங்கள். (அதனால்) நீங்கள் வெற்றியடைவீர்கள். (அல்குர்ஆன் 5:90)***

இஸ்லாமிய மக்கள் பலர் அறிந்தும் விடாப்பிடியாக பணத்தின் மீதான ஆசையினால் அவர்கள் விடுவதில்லை பணம் என்பது மறுமை வரை நிலைத்திருப்பதில்லை என்பதை மனதில் வைக்காமலேயே அவர்கள் பணத்தின் மீது பேராசை வைத்திருக்கிறார்கள்.

**قال الله تعالى: الذي جمع مالا وعدده . يحسب ان ماله اخلده**

***பொருளைச் சேகரித்து (நல்ல வழியில் செலவு செய்யாது) அதை எண்ணிக் கொண்டே இருப்பவன், தன் செல்வம் தன்னை என்றென்றுமே (உலகத்தில்) நிலைத்திருக்கச் செய்யுமென்றும் எண்ணிக் கொண்டான். (அல்குர்ஆன் 104:2,3)***

மனிதர்களில் பலர் பணம் நிலைத்து இருக்கும் என்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்கள் பணத்தை சேர்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று வாழ்க்கையை வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எந்த அளவிற்கு சமூக வலைத்தளம் ஒரு மனிதனை விழ வைக்கிறது என்றால், ஒரு மனிதன் ஒரு நாளில் சராசரியாக 6 முதல் 8 மணி நேரம் சமூக வலைத் தளங்களில் சர்வ சாதாரணமாக நேரத்தை செலவு செய்கின்றான்.

## எதை விட்டெல்லாம் வழி கெடுக்கிறது?

ஒரு வாலிபன் mobileல் game விளையாடும் பொழுது தொழுகைக்காக இகாமத் சொல்லும் பொழுது அவன் மனதில் சைத்தான் விளையாட்டை முடித்து செல்லுமாறு தூண்டுகிறான். இவ்வாறு சைத்தானுடைய வழிகேட்டிற்கு கட்டுப்பட்டு தொழுகையையும் தவற விடுகிறான். ஒருக்கால் அவன் தொழுகைக்காக வந்தாலும் அவனுடைய மனது இக்லாஸ் ஆக இருப்பதில்லை. அவனுடைய மனதை சைத்தான் விளையாட்டில் மூழ்கடித்து விட்டான்.

இது மட்டுமல்லாமல் அவன் தன்னுடைய சொந்த பந்தங்கள் வீட்டிற்கு சென்றாலும் சொந்தங்களோடு நல்ல வார்த்தைகளை பேசி நேரத்தை செலவு செய்யாமல் mobile phone-னை பார்த்த படியே நேரத்தை கழித்து விடுகிறான். ஏதாவது கேள்வி கேட்டாலும் முகத்தை பார்த்து பதில் சொல்லாமல் phone-யை பார்த்து பதில் சொல்கிறான். இவ்வாறு சைத்தான் மிக ஆழமாக சமூக வலைத் தளத்தில் மனிதர்களை மூழ்க வைக்கிறான்.

## சமூக வலைத்தளத்தில் ஆபாச படம்

Facebook, Instagram, Snapchat போன்ற மேலே கூறப்பட்ட இவற்றிலும் ஆபாசம் இருக்கிறது. ஆனாலும் தனிப்பட்ட முறையிலும் ஆபாச படங்களை சர்வ சாதாரணமாக அல்லாஹ்வின் மீது

பயம் இல்லாமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒருவேளை அவன் ஒவ்வொரு நாளையும் அல்லாஹ்வை நினைவு கூறுவதிலும் தொழுவதிலும் விவாதத்திலும் நேரத்தை கழிக்க கூடியவர்களாக இருந்தால் ஆபாசத்தை வெறுத்து ஒதுக்க கூடியவனாக ஆகிவிடுவான்.

**قال الله تعالى: ان صلاه تنهى عن الفحشاء والمنكر ولذكر الله اكبر والله يعلم ما تصنعون (عنكبوت)**

***(நபியே!) வஹ்யி மூலம் உமக்கு அறிவிக்கப்பட்ட இவ்வேதத்தை (மக்களுக்கு) நீர் ஓதிக் காண்பித்து தொழுகையைக் கடைப்பிடித்து வருவீராக. ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங் களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும்.***

***(அல்குர்ஆன்: 29:45)***

தொழுகையிலும் மற்ற வணக்க வழிபாடுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டால் அவன் மானக்கேடான விஷயத்தின் பக்கம் நெருங்காமல் தன்னை பாதுகாத்துக் கொள்வான். அல்லாஹ் இந்த உலகத்தில் நடக்கக்கூடிய மனிதர்கள் செய்யக்கூடிய அனைத்தையும் அறியக்கூடியவனாக இருக்கின்றான்.

மனிதர்களில் பெரும்பாலும் இந்த உலகத்தில் இருக்கும் ஆசைகளுக்காக தன்னை அர்ப்பணித்து நாளை மறுமையில் நஷ்டவாளியாக கை சேதம் அடைந்தவர்களாக ஆகிவிடுவார்கள்.

இவ்வுலக வாழ்க்கையை மனிதர்களுக்கு மிக அழகாக சைத்தான் வர்ணித்து காண்பிப்பான். அதற்கெல்லாம் நாம் மயங்கி விட்டால் நம்முடைய மறுமை நிலை கை சேதத்திற்குரிய நிலையாக மாறிவிடும். அல்லாஹ் அதிலிருந்து நம்மை பாதுகாக்க வேண்டும்.

**قال الله تعالى: وما الحياه الدنيا الا متاع الغرور. (حديد)**

***எனவே இவ்வுலகம் என்பது மனிதர்களை ஏமாற்றக்கூடியதாக இருக்கிறது.***

***அல்குர்ஆன்: 57:20***

மேலும் அல்லாஹு கூறுகிறான்:

**قال الله تعالى: وان الدار الاخره لهي الحيوان. (عنكبوت)**

***இவ்வுலக வாழ்க்கை வீண் விளையாட்டும், வேடிக்கையுமே தவிர வேறொன்றும் இல்லை. மேலும் மறுமையின் வாழ்க்கைதான் நிச்சயமாக நிலையான வாழ்க்கை ஆகும். இதை அவர்கள் அறிந்திருக்க வேண்டுமே!***

***அல்குர்ஆன்: 29:64***

ஆக அன்பார்ந்தவர்களே நாம் இத்தகைய நிலையில் இருந்து நம்மை பாதுகாத்து இருக்க வேண்டும். மறுமை என்பது நிரந்தரமானதாக இருக்கிறது. சமூக வலைத்தளங்கள் பல விஷயங்களை அழகாக காண்பிக்கும். அதற்கெல்லாம் மயங்கி விடாமல், சொர்க்கத்தை ஆதரவு வைத்தவர்களாக இவ்வுலகத்திலே வாழ்ந்தோம் என்றால் நமக்கு நிச்சயம் நாளை மறுமையில் வெற்றி இருக்கிறது.

எனவே, அல்லாஹ் வழி கெடுக்கும் சைத்தானின் தீங்குகளை விட்டும் நம் அனைவரையும் பாதுகாத்து நாளை சொர்க்கத்தில் வெற்றி பெற்ற மக்களோடு அல்லாஹ் ஒன்று சேர்த்து உயர்ந்த சொர்க்கத்தை நம் அனைவருக்கும் தந்தருள்புரிவானாக!

இன்ஷா அல்லாஹ்!

# தஃப்ஸீர் சூரத்துல் பகரா

وَإِذِ اسْتَسْقَىٰ مُوسَىٰ لِقَوْمِهِ فَقُلْنَا اضْرِب بِّعَصَاكَ الْحَجَرَ ۖ فَانفَجَرَتْ مِنْهُ
اثْنَتَا عَشْرَةَ عَيْنًا ۖ قَدْ عَلِمَ كُلُّ أُنَاسٍ مَّشْرَبَهُمْ ۖ كُلُوا وَاشْرَبُوا
مِن رِّزْقِ اللَّهِ وَلَا تَعْثَوْا فِي الْأَرْضِ مُفْسِدِينَ

**{60} ஆனால் அநியாயம் செய்தவர்கள் தமக்குக் கூறப்பட்ட சொல்லை வேறொன்றாக மாற்றிவிட்டார்கள்; எனவே அநியாயம் செய்தவர்கள் மீது, வரம்பு மீறி பாவம் செய்து கொண்டிருந்த காரணத்தினால் வானத்திலிருந்து நாம் வேதனையை இறக்கி வைத்தோம்.**

இவ்வசனம் முந்தைய வசனத்தின் தொடர்ச்சியாகும் இஸ்ராயிலீயருக்கு அல்லாஹ் பைத்துல் மக்திஸ் எனும் ஊருக்குள் பனிந்தவர்களாக நுழையுங்கள் என்று கட்டளையிட்டபோது அல்லாஹ்வின் கட்டளையை அவர்கள் கேளிக்கூத்தாக்கினார்கள் என்பதைத் தான் இவ்வசனம் விளக்குகிறது.

அவர்கள் மாற்றிய சொல் என்ன என்பதைக்குறித்து அல்லாஹ்வின் தூதர் அவர்கள் பின்வருமாறு விளக்கினார்கள்.

இஸ்ராயிலீயரிடம் ஊருக்குள் நுழையும் போது அதன் வாசலில், தலை தாழ்த்திய வாறும் பாவமன்னிப்புக் கோருகிறோம் என்று சொல்லியவாறும் நுழையுங்கள்" என்று கட்டளையிடப்பட்டது. ஆனால், அவர்கள் யிஹித்தத்துன்' என்னும் சொல்லை மாற்றி விட்டார்கள்; தங்கள் புட்டங்களால் தவழ்ந்தபடி ஊருக்குள் நுழைந்தார்கள்; மேலும், தீட்டப்படாத ஒரு கோதுமைக்குள் ஒரு தானிய வித்து என்று சொன்னார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி)
நூல்: ஸஹீஹுல் புஹாரி 3403

ஹித்தத்துன் என்பதை முந்தைய வசனத்தில் தெளிவுபடுத்தியுள்ளோம் அது தான் அவர்களுக்கு சொல்லுமாறு கட்டளையிடப்பட்ட சொல் ஆனால் அவர்கள் அதற்கு பகரமாக ஹிந்தத்துன் என்று சொன்னார்கள் அதன் பொருள் தீட்டப்படாத ஒரு கோதுமைக்குள் ஒரு தானிய வித்து என்பதாகும்.

வானத்திலிருந்து நாம் வேதனையை இறக்கி வைத்தோம்.

இவ்வசனத்தில் ரிஜ்ஸ் எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது இதற்கு விளக்கமாக இப்னு அப்பாஸ் அவர்கள் கூறினார். அல்லாஹ்வின் வேதத்தில் சொல்லப்பட்டுள்ள ரிஜ்ஸ் எனும் சொல் வேதனையை குறிப்பதாகும்.

ஜாமிஉல் பயான் அன் தஃவீலி
ஆயில் குர்ஆன் 1/413

அவ்வேதனை என்பது கொள்ளை நோயாகவும் இருக்கலாம் என்பதை விரிவுரையாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள் பின்வரும் நபிமொழியும் இது போன்ற வேறு நபிமொழிகளும் இக்கருத்திற்கு காரணமாக அமைந்துள்ளது.

ஆமிர் பின் சஅத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது: (என் தந்தை) சஅத் பின் அபீவக்காஸ் (ரலி) அவர்கள் உசாமா பின் ஸைத் (ரலி) அவர்களிடம், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து கொள்ளை நோயைப் பற்றி நீங்கள் செவியுற்றிருக்கிறீர்களா?" என்று கேட்டார்கள்.

தொடர்ச்சி 29ஆம் பக்கம்

# அல்லாஹ்வை அஞ்சிக்கொள்! பொறுமையாக இரு!

**ஓர் அடக்கத் தலம் அருகில் அழுது கொண்டிருந்த ஒரு பெண்ணை நபி (ஸல்) அவர்கள் கடந்து சென்றபோது, "அல்லாஹ்வை அஞ்சிக்கொள்! பொறுமை யாக இரு" என்றார்கள். அதற்கு அப்பெண், "என்னைவிட்டு அகன்று செல்வீராக! எனக்கேற்பட்ட இத்துயரம் உமக்கு ஏற்படவில்லை" என்று நபி (ஸல்) அவர்கள் யாரென அறியாமல் கூறினார்.**

**அவர் நபி (ஸல்) அவர்கள் எனக் கூறப் பட்டதும் அப்பெண் நபி (ஸல்) அவர்கள் இருக்குமிடத்திற்கு வந்தார். அங்கே நபியவர்களுக்குக் காவலாளிகள் யாரும் இருக்கவில்லை நான் உங்களை அறிய வில்லை" என நபி (ஸல்) அவர்களிடம் கூறினார்.**

**அப்போது "பொறுமை என்பது, துன்பம் தாக்கிய ஆரம்பத்தில் கடைபிடிப்பது தான்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

*அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் (ரலி) நூல்: ஸஹீஹுல் புஹாரி 1283*

**தன் குழந்தை அருகே அழுதுகொண்டி ருந்தாள். என்று ஸஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பில் வந்துள்ளது.**

## விளக்கம்:

மனிதன் கூலி கொடுக்கப்படும் பொறுமை என்பது, அவனுக்கு ஆரம்ப உரசலின் அதாவது துயரம் அவனை முதன்முதலாகத் தாக்கும்போது பொறுமையுடன் இருப்பதுதான். இதுவே உண்மையான பொறுமை. அதற்குப் பிறகு வரும் பொறுமை என்பது ஆறுதலடைந்து தேறுவது போன்றதாகும்; அது சில நேரங்களில் கால்நடைகள் தேறுவது போலக்கூட இருக்கலாம்.

எனவே, உண்மையான பொறுமை என்னவென்றால், ஒருவருக்கு ஆரம்ப உரசலின் போது, அவர் பொறுமையாக இருந்து, அல்லாஹ்விடமிருந்து கூலியை எதிர்பார்த்து, "இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். அல்லாஹ்வே! என் துயரில் எனக்குப் பலனைக் கொடு, இதைவிடச் சிறந்த ஒன்றைக் கொடு" என்று கூறுவது சிறப்பாகும்.

## இந்த ஹதீஸிலிருந்து கிடைக்கும் பலன்கள்

**முதலாவது:** நபி (ஸல்) அவர்களின் சிறந்த பண்பு: நபி (ஸல்) அவர்களின் சிறந்த குணம் மற்றும் சத்தியத்தின்பாலும், நன்மைப்பாலும் மக்களை அழைக்கும் பண்பு. அவர்கள், அந்தக் கல்லறையின் அருகில் அழுதுகொண்டிருந்த பெண்ணைப் பார்த்தபோது, அல்லாஹ்வைப் பயந்துகொள்ளுமாறும் பொறுமையுடன் இருக்குமாறும் அவளுக்குக் கட்டளையிட்டார்கள்.

அப்பெண், "என்னிடமிருந்து விலகிச் செல்லுங்கள்" என்று கூறியபோதும்கூட, அவர்கள் தங்களுக்காகப் பழிவாங்க வில்லை. அவளை அடிக்கவில்லை, அல்லது பலவந்தமாக எழுப்பிவிடவும் இல்லை. ஏனெனில், பிரிவின் துக்கம் அவளை மிக அதிகமாகப் பாதித்துள்ளது என்பதையும், அதனால் அவளால் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதையும் அவர்கள் அறிந்துகொண் டார்கள். அதனால்தான் அவள் தன் வீட்டிலிருந்து வெளியே வந்து இந்தக் கபற் அருகில் அழுகிறாள் என்பதையும் அறிந்துகொண்டார்கள்.

## கப்றுகளை சந்திப்பது பற்றிய குறிப்பு:

ஒருவர், "பெண்கள் கப்றுகளுக்கு செல்வது ஹராம் இல்லையா?" என்று கேட்டால், "ஆம், அது பெண்களுக்கு ஹராம் தான். அது பெரும் பாவங்களில் ஒன்றாகும்! ஏனெனில் நபி (ஸல்) அவர்கள், கப்றுகளைச் சந்திப்பவர்களையும், அவற்றின் மீது மஸ்ஜித்களையும் விளக்கு களையும் அமைப்பவர்களையும் சபித்தார்கள்" என்று நாம் கூறுவோம்.

ஆனால் இந்தப் பெண், ஸியாரத் செய்வதற்காக வெளியே வரவில்லை. மாறாக, அக்குழந்தையின் பிரிவின் துயரமும், கடுமையான கவலையும் அவள் மனதை ஆட்கொண்டதால், தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் வெளியே வந்தாள். இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் அவளை மன்னித்து, பலவந்தமாக அவளை எழுப்பவோ, அல்லது தன் வீட்டிற்குத் திரும்பிச் செல்லும்படி வற்புறுத்தவோ இல்லை.

## அறியாமைக்கான மன்னிப்பு:

இந்த ஹதீஸின் பலன்களில் ஒன்று என்னவென்றால், அறியாமைக்காக ஒரு மனிதன் மன்னிக்கப்படுவான். அது மார்க்கச் சட்டத்தைப் பற்றிய அறியா மையாக இருந்தாலும் சரி, அல்லது நிலைமையைப் பற்றிய அறியாமையாக இருந்தாலும் சரி. ஏனெனில், இந்தப் பெண்மணி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம், "என்னிடமிருந்து விலகிச் செல்லுங்கள்" என்று கூறினாள். நல்லதையும், இறையச்சத்தையும், பொறுமையையும் அவர்களுக்கு அவர் கட்டளையிட்ட போதிலும், அவள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை அறிந்துகொள்ள வில்லை. இதற்காக நபி (ஸல்) அவர்கள் அவளை மன்னித்துவிட்டார்கள்.

## பொறுமையின் சிறப்பு:

இந்த ஹதீஸின் பலன்களில் ஒன்று: ஒருவன் புகழக்கூடிய பொறுமை எதுவென்றால், அது முதல் உரசலின் போது மேற்கொள்ளும் பொறுமைதான். மனிதன் பொறுமையாக இருந்து, அல்லாஹ்விடமிருந்து கூலியை எதிர்பார்த்து, அல்லாஹ் எடுத்ததும் அவனுக்கே உரியது, அவன் கொடுத்ததும் அவனுக்கே உரியது, மேலும் ஒவ்வொரு பொருளும் அவனிடம் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுடனேயே உள்ளது என்பதை அவன் அறிந்துகொள்ள வேண்டும்.

## அடக்கஸ்தலத்தில் அழுவது கூடாது:

இந்த ஹதீஸின் பலன்களில் ஒன்று என்னவென்றால், அடக்கஸ்தலத்தில் அழுவது பொறுமைக்கு முரணானது. இதனால்தான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவளிடம், "அல்லாஹ்வைப் பயந்துகொள், பொறுமையாக இரு" என்று கூறினார்கள்.

மனிதர்களில் சிலர் சோதிக்கப்படும் போது, அவர்களில் ஒருவர் இறந்து விட்டால், அவரின் அடக்கஸ்தலத்திற்குத் திரும்பத் திரும்பச் சென்று அங்கே அழுதுகொண்டிருப்பார்கள். இது பொறுமைக்கு முரணானது. மாறாக, நாம் கூறுவது என்னவென்றால்: நீங்கள் அந்த மையித்துக்குப் பலனளிக்க விரும்பினால், நீங்கள் உங்கள் வீட்டி லிருந்தே அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்யுங்கள். நீங்கள் அடக்கஸ்தலத் திற்குத் திரும்பத் திரும்பச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், அடக்கஸ்தலத்திற்குத் திரும்பத் திரும்பச் செல்வது, அந்த மையித்தை எப்போதும் ஒருவரின் மனதில் கற்பனை செய்து கொண்டே இருக்கச் செய்யும்; அவரது நினைவை விட்டு அது நீங்காது. இதன் விளைவாக, அவர்அந்தத் துயரத்தை ஒருபோதும் மறக்கவே மாட்டார். ஒரு மனிதன் தன்னால் இயன்றவரை அந்தத் துயரத்திலிருந்து கவனத்தைத் திசை திருப்பி மறந்துவிடுவதே சிறந்ததாகும்.

(ஷரஹு ரியாளுஸ்ஸாலிஹீன்)

26ஆம் பக்க தொடர்ச்சி

*அதற்கு உசாமா (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், கொள்ளை நோய் என்பது இஸ்ரா யிலீயர்களின் ஒரு கூட்டத்தார்மீது அல்லது உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது அவர்களுடைய அட்டூழியங்கள் அதி கரித்தபோது அனுப்பப்பட்ட ஒரு வகை வேதனையாகும். அது ஒரு பிரதேசத்தில் இருப்பதாக நீங்கள் கேள்விப்பட்டால் அங்கே நீங்கள் செல்லாதீர்கள். நீங்கள் இருக்கின்ற ஒரு பூமியில் அது பரவிவிட்டால், அதிலிருந்து தப்பியோட முனைந்தவர்களாக அங்கிருந்து வெளியேறாதீர்கள்" என்று சொன்னார்கள் எனப் பதிலளித்தார்கள்.*

*நூல்: ஸஹீஹுல் புஹாரி 3473*

இமாம் தபரி அவர்கள் கூறினார்: இங்கே, "ரிஜ்ஸ்" (الرجز) என்பதற்கு "தண்டனை" (العذاب) என்று விளக்கமளித்துள்ளோம். அல்லாஹ்வின் தண்டனைகள் பல வகைகளாக உள்ளன.

யாருடைய நிலையை இங்கே விவரித் துள்ளோமோ அவர்கள் மீது அல்லாஹ் வானத்திலிருந்து தண்டனையை இறக்கினான் என்று அல்லாஹ் அறிவிக்கிறான். அது ஒரு கொள்ளை நோயாக (பிளேக்) இருக்கலாம், அல்லது வேறொன்றாகவும் இருக்கலாம். இது எந்த வகைத் தண்டனை என்பதைக் குர்ஆனின் வெளிப்படையான வசனங்களிலோ அல்லது நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடமிருந்துள்ள உறுதியான அறிவிப்பிலோ எந்த ஆதாரமும் இல்லை.

எனவே, இது குறித்துச் சரியாகக் கூற வேண்டுமானால், அல்லாஹ் கூறிய படியே நாம் கூறுவதுதான் சரியானது:

*"அவர்கள் மீது வானத்திலிருந்து தண்டனையை நாம் இறக்கினோம்."*

இருந்தாலும் இப்னு ஸைத் அவர்கள் கூறிய கருத்து சரியானது தான் என்ற எண்ணம் மனதில் மேலோங்குகிறது. அதற்குக் காரணம், நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கொள்ளை நோய் (பிளேக்) ஒரு "ரிஜ்ஸ்" என்றும், அது நமக்கு முன் வாழ்ந்த சமுதாயத்தினரைத் தண்டித்தது என்றும் அறிவித்த செய்திதான்.

அனாலும் அது நிச்சயம் அப்படியேதான் என்று என்னால் உறுதியாகக் கூற முடியாது. ஏனெனில், நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் அறிவிப்பில், எந்தச் சமுதாயம் இந்தத் தண்டனையால் தண்டிக்கப்பட்டது என்று தெளிவு படுத்தப்படவில்லை. இந்தத் தண்டனை யால் தண்டிக்கப்பட்டவர்கள், "அநியாயம் செய்தவர்கள், அவர்களுக்குக் கூறப்பட்ட வார்த்தைக்குப் பதிலாக வேறொன்றைக் கூறினார்கள்" என்று அல்லாஹ் விவரிக்கும் இந்தக் கூட்டத்தாரைத் தவிர வேறு ஒருவராக இருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

*ஜாமிஉல் பயான் அன் தஃவீலி ஆயில் குர்ஆன் 1/413*

## பாவம் செய்த காரணத்தினால்

*இமாம் தபரி அவர்கள் கூறினார்: ஃபிஸ்கு என்றால் வெளியேறிச்செல்லுதல் என்பதாகும் இதன் அடிப்படையில் இவ்வசனத்தின் விளக்கம் அல்லாஹ்விற்கு கட்டுப்படுவதை விட்டு விட்டு அவனுக்கு மாறுசெய்வதன் பால் வெளியேறிச்செல்வது அவன் கட்டளைக்கு மாற்றமாக நடப்பது என்பதாகும்.*

*ஜாமிஉல் பயான் அன் தஃவீலி ஆயில் குர்ஆன் 1/414*

# கணிதத் துறையில் முஸ்லிம் அறிஞர்களின் பங்களிப்புகள்

– பிஸ்மில்லாஹ் கான் பைஜி



Thabit Ibn Qurra
(836-901 C.E.)

**நிலையியலின் நிறுவனர்** (The Founder of the Statics) **அறிஞர் தாபித் இப்னு குர்ரா**

அப்பாஸியாக்கள் ஆட்சியின்போது அல்ஜஸீராவின் தியார் முதாரின் துணைப்பிரிவாக இருந்த ஹர்ரான் என்ற ஊரில் ஹிஜ்ரி 211 அல்லது 221 கிபி 826 அல்லது கிபி 836 இல் அறிஞர் தாபித் இப்னு குர்ரா பிறந்தார்.

இளமைப்பருவத்தில் தனது ஊரில் உள்ள கடைவீதிகளில் நாணயம் மாற்றும் வேலையில் ஈடுபட்டிருந்தார். ஒருமுறை “பனு மூஸா என்ற பெயரில் கணிதத்துறையில் மிகப்பிரபல்யமான மூன்று சகோதரிகளில் மூத்தவரான அபு ஜாபர் முஹம்மது இப்னு மூஸா அஷ்ஷாகிர் என்ற கணிதத்துறை அறிஞரை சந்தித்தார். இயல்பாகவே அறிஞர் தாபித் அவர்களிடம் இருந்த திறமையைக் கண்டு, அவரை பாக்தாத் வரும்படியும், அங்கு வந்தால் கணிதம், வானியல் மாறும் தத்துவம் போன்ற வற்றை தங்களின் நேரடிக் கண்காணிப்பில் கற்றுத்தருவதாக அறிஞர் முஹம்மது இப்னு மூஸா கூறினார். அந்த அழைப்பை ஏற்று அறிஞர் பக்தாத் சென்றார். இப்னு மூஸா அவர்களின் வட்டத்தின் ஒரு பகுதியாக மாறுவதற்கும் கிரேக்க கணித நூல்களை மொழிபெயர்க்க அவர்களுக்கு உதவுவதற்கும்தான் அறிஞர் தாபித் முதலில் பக்தாத்திற்கு வந்தார்.

அறிஞர்கள் இப்னு மூஸா சகோதரர் களுடன் அறிஞர் தாபித் எப்படி கணிதம், வானியல், ஜோதிடம், மந்திரம், இயந்திரவியல், மருத்துவம் மற்றும் தத்துவம் ஆகியவற்றில் தன்னை எவ்வாறு இணைத்துக் கொண்டார் என்பது பற்றிய விரிவான வரலாற்றுச் செய்திகள் ஏதும் இல்லை. ஆனால், பின்னாளில் பக்தாத்தில் இருந்த அனைத்து துறை அறிஞர்கள் மட்டுமல்லாது, அதிகாரம் மற்றும் பெரும் செல்வாக்கு பெற்றவர்களுக்கு மத்தியிலும் அறிஞர் தாபித் தன் திறமை யைக்கொண்டு மிகப்பிரபலமடைந்தார்.

அறிஞரின் வாழ்வின் பிற்பகுதியில், அறிஞர் தாபித்திற்கு நெருக்கமாக இருந்த அப்பாசிய கலிஃபா அல் முதாதித் ஆட்சியில் (892–902), அறிஞரை நீதிமன்ற வானியலாளராக ஆக்கினார். இன்னும் அறிஞர் தாபித்,

கலீஃபாவின் தனிப்பட்ட நண்பராகவும், அரசவை உறுப்பினராகவும் ஆனார். இத்தகைய உயர்ந்த பதவிகளை அறிஞர் அடைவதற்கு காரணம், அவரது வியத்தகு கல்வியாற்றலும், பல்துறைகளில் பல அறிய சாதனைகளை நிகழ்த்தியது மாகும்.

## பிறமொழி நூற்களை அரபு மொழிக்கு மொழிபெயர்த்தல்:

அறிஞர் தாபித்தின் தாய் மொழி “சிரியாக்“ ஆகும். இது எடெசாவிலிருந்து வந்த மத்திய அராமிக் வகையாகும், மேலும் அறிஞர் இடைக்கால கிரேக்கம் மற்றும் அரபு ஆகிய இரண்டிலும் சரளமாகப் பேசக்கூடியவராக இருந்தார்.

அதனால், அவர் பல்மொழிகளில் பல கட்டுரைகளை எழுதினார். இன்னும் அவர் மும்மொழியாளராக இருந்ததால், கிரேக்க அரேபிய மொழிபெயர்ப்பு இயக்கத்தின் போது அறிஞர் தாபித் அவர்களின் பங்கு மிக முக்கியமாக இருந்தது.அதனால், மொழிபெயர்ப்பில் மாணவர்களிடையே திறமையை உருவாக்குவதற்கென்றே பக்தாத்தில் ஒரு பள்ளியையும் உருவாக்கினார்.

இன்று துருக்கியில் உள்ள பெர்கா (Perga) எனும் நகரில் வாழ்ந்த அப்பல்லோனியஸ் (Apollonius) எனும் கிரேக்க வானியலாளரின் படைப்புகளை அரபு மொழிக்கு மொழிபெயர்த்தார்கள்.



அறிஞர் அப்பல்லோனியஸின் “கோனிக்ஸ்” (Conics) என்ற நூலின் அறிஞர் தாபித்தின் அரபு மொழி பெயர்ப்பின் பக்கங்கள்.

இன்னும், ஆர்க்கிமிடிஸ் ஆஃப் சைராகுஸ் (Archimedes of Syracuse) ஒரு பண்டைய கிரேக்க கணிதவியலாளர், சிசிலியில் உள்ள சைராகுஸ் (Syracuse) நகரத்தைச் சேர்ந்தவர். இவர் இயற்பியல், பொறியியல், வானியல் ஆகிய துறைகளிலும் தேர்ந்தவர். இவர் கிமு 287 முதல் கிமு 212 வரை வாழ்ந்தவர். இவரின் நூற்களையும் அறிஞர் அரபு மொழியில் மொழிபெயர்த்துள்ளார்கள்.

## எழுகோணம் (heptagon)




கிரேக்க கணிதவியலாளர் சிரக்கூசாவின் ஆர்க்கிமிடீஸ் (Archimedes) என்பவர் வடிவவியலில் பற்றி கிரேக்க மொழியில் எழுதிய நூலை அறிஞர் தாபித் அவர்கள் மொழிபெயர்த்த நூலின் பிரதி 20 ஆம் நூற்றாண்டில் கிடைக்கப்பெற்றது, அதன் மூலம் கணிதத்துறைக்கு முக்கிய ஆய்வுகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன என்று வரலாற்று ஆசிரியர் ஹோஜேன்திஜிக் (Hogendijk, Jan P. (1984).) தனது “வழக்கமான ஹெப்டகனின் கிரேக்க மற்றும் அரபு கட்டுமானங்கள்”. (“Greek and Arabic constructions of the regular heptagon”.)என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## கணித்தத்துறையில் அறிஞரின் பங்களிப்புகள்

### இசைவு எண்கள் (Amicable numbers) பற்றிய ஆய்வு

அறிஞர் கணித்தத்துறையில் “இசைவு எண்கள்” (Amicable numbers) பற்றிய ஆய்வை மேற்கொண்டு அதன் சமன்பாட்டை அறிஞர் கண்டுபிடித்தார். அதெற்கென தனி விதிகளையும் அமைத்தார்.

இசைவு எண்கள் பற்றிய ஆய்வை முடித்து அதன் சமன்பாட்டை அறிஞர்

வெளியிட்ட இந்த ஆய்வு கிரேக்கர்கள் கூட மேற்கொள்ளாத ஆய்வாகும் என்று நெதர்லாண்டைச் சேர்ந்த கணிதவிய லாளர் ஜான் பி . எச் . கெண்டடிஜிக் (JAN P. H.GENDIJK - 1989) "தாபித் இப்னு குர்ரா மற்றும் இணக்கமான எண்களுக் கான அவரது விதி பற்றிய குறிப்புகள் (Notes on Thabit ibn Qurra and his rule for amicable numbers) என்ற தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## இசைவு எண்கள் என்றால் என்ன?

இசைவு எண்கள் (Amicable numbers) என்பவை, ஒரு எண்ணின் தகுவகு எண்களின் (proper divisors) கூட்டுத்தொகை மற்றொரு எண்ணுக்குச் சமமாகவும், அதேபோல் அந்த மற்றொரு எண்ணின் தகு வகுஎண்களின் கூட்டுத்தொகை முதல் எண்ணுக்குச் சமமாகவும் இருக்கும் இரண்டு இயல் எண்களின் சோடியாகும்.

உதாரணமாக, 220 மற்றும் 284 ஆகிய இந்த இரு எண்கள் இசைவு எண்களாகும். ஏனெனில் 220இன் தகு வகு எண்களின் கூட்டுத்தொகை 284க்கு சமம், மேலும் 284இன் தகு வகு எண்களின் கூட்டுத் தொகை 220க்கு சமம்.

ஒரு எண்ணின் தகு வகுஎண்கள் என்பது அந்த எண்ணைத் தவிர்த்து, அதை வகுக்கக்கூடிய அனைத்து எண்களாகும் (உதாரணமாக, 10இன் தகு வகுஎண்கள் 1, 2, 5).

### உதாரணம் (220, 284):

220இன் தகு வகுஎண்கள்: 1, 2, 4, 5, 10, 11, 20, 22, 44, 55, 110.

கூட்டுத்தொகை: 1 + 2 + 4 + 5 + 10 + 11 + 20 + 22 + 44 + 55 + 110 = 284.

284இன் தகு வகுஎண்கள்: 1, 2, 4, 71, 142.

கூட்டுத்தொகை: 1 + 2 + 4 + 71 + 142 = 220.

எனவே, 220 மற்றும் 284 ஆகியவை இசைவு எண்களின் மிகச்சிறிய சோடியாகும்.

## குறுக்குவெட்டி (Transversal) மற்றும் பிதாகரஸ் தேற்றம் (Pythagorean theorem) பற்றிய ஆய்வு:

இசைவு எண்கள் பற்றிய ஆய்வை, எண்களின் கோட்பாடுகள் பற்றிய ஆய்வை அறிஞர் மேற்கொண்டபோது, அவரது குறுக்குவெட்டு (வடிவியல்) தேற்றம் சம்பந்தமாகவும், அதை நிறுவும் எண்களின் வடிவியல் உறவுகள் சம்பந்தமாகவும் ஆய்வு செய்வதற்கான அதிக வாய்ப்பினை வழங்கியது.

இன்னும், பித்தகோரியன் தேற்றத்தின் பொதுவான ஆதாரத்தை அறிஞர் தாபித் தனது ஆய்வில் விவரித்தார். யூக்ளிட்டின் ஐந்தாவது போஸ்டு லேட்டின் அறிவை உள்ளடக்கிய பித்த கோரஸின் ஆதாரத்தின் பலப்படுத்தப் பட்ட விரிவாக்கத்தை அறிஞர்தான் வழங்கினார் என்று ஷ்லோமிங், ராபர்ட் (Shloming, Robert (1970)) எனும் வரலாற்று ஆசிரியர் தனது "தாபித் இப்னு குர்ரா மற்றும் பித்தகோரியன் தேற்றம்" (Thabit Ibn Qurra and the Pythagorean Theorem) எனும் நூலில் குறிப்பிடுகிறார்.

## குறுக்குவெட்டி (Transversal) என்றால் என்ன?




வடிவவியலில், ஒரே தளத்திலுள்ள இரு கோடுகளை, இரண்டு வெவ்வேறு புள்ளிகளில் வெட்டும் கோடானது

குறுக்குவெட்டி (Transversal) ஆகும். குறுக்குவெட்டியைப் பயன்படுத்தி, யூக்ளிடிய தளத்தில் இரு கோடுகள் இணையானவையா என்பதை அறியலாம்.

## பிதாகரஸ் தேற்றம் (Pythagorean theorem) என்றால் என்ன?




பிதாகரஸ் தேற்றம் அல்லது பித்தேகோரசு தேற்றம் அல்லது பைத்தகரசின் தேற்றம் (Pythagorean theorem அல்லது Pythagoras' theorem) என்பது ஒரு செங்கோண முக்கோணத்தில் உள்ள மூன்று பக்கங்களுக்கும் இடையே உள்ள தனிச்சிறப்பான ஒரு தொடர்பைக் கூறும் ஒரு கூற்றாகும்.

## தேற்றத்தின் கூற்று

ஒரு செங்கோண முக்கோணத்தில், அதன் செம்பக்கத்தின் (கர்ணத்தின்) நீளத்தின் இருமடியானது, மற்ற பக்க நீளங்களின் இருமடிகளின் கூட்டுக்கு ஈடு (சமமாகும்).

## சதுரங்கப் பலகை சிக்கல்கள்

(Chessboard problems)

வடிவியல் உறவுகளில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அறிஞர் தனது கணிதப்பணியைத் தொடர்ந்து சதுரங்கப் பலகை சிக்கல்களுக்கு (Chessboard problems) பல தீர்வுகளைக் கணக்கிடுவதற்கான வழிமுறைகளை வகுத்தளித்தார்.

கணித சதுரங்கப் பிரச்சனை (Chessboard problems) என்பது ஒரு சதுரங்கப் பலகை மற்றும் சதுரங்கக் காய்களைப்




பயன்படுத்தி உருவாக்கப்படும் ஒரு கணிதச் சிக்கலாகும். இந்த சிக்கல்கள் பொழுதுபோக்கு கணிதத்திற்கு சொந்தமானது. எட்டு குயின்ஸ் புதிர் மற்றும் குதிரையின் சுற்றுப்பயண பிரச்சனை ஆகியவை இந்த வகையான மிகவும் நன்கு அறியப்பட்ட பிரச்சனைகளாகும். இன்னும், இவை வரைபடக் கோட்பாடு மற்றும் கலவையுடன் தொடர்பு கொண்டவையாகும்.

இந்த சதுரங்க விளையாட்டில் வெற்றி பெறுவதற்கு தேவையான வரிசைமாற்றங்கள் மற்றும் அதற்கான வழிமுறைகளை வகுப்பதற்கு "காம்பினேட்டரிக்ஸ்" (Combinatorics) எனும் சேர்வியல் கணிதத்தை அறிஞர் பயன்படுத்தி தீர்வை வகுத்தளித்தார் என்று அறிவியல் – இஸ்லாம்: ஒரு வரலாறு (Science & Islam : a history) எனும் நூலின் ஆசிரியர் மசூத், எஹ்சான் (Masood, Ehsan (2009)) எனும் வரலாற்று ஆசிரியர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## கூம்பு வெட்டு (conic section) மற்றும் யூக்ளிடிய வடிவியல் (Euclidean geometry)

(Euclidean geometry)






கணிதத்தில் கூம்பு வெட்டு (conic section) என்பது ஒரு செங்குத்து வட்டக்கூம்பும், ஒரு மட்டமான தளமும் ஒன்றை யொன்று வெட்டும்போது உருவாகும் வளைகோடுகள் ஆகும்.

யூக்ளீட் வடிவியல் அல்லது யூக்ளிடிய வடிவவியல் (Euclidean geometry) என்பது அலெக்சாந்திரியாவில் 325 முதல் கி.மு. 265 வரை வாழ்ந்த யூக்ளீட் என்பவரால் உருவாக்கப்பட்ட வடிவியலாகும்.

கூம்பு பிரிவுகள் மற்றும் ஒரு பரவளைய வடிவத்தின் கணக்கீடு ஆகியவற்றை அறிஞர் ஆய்வு செய்தார். இன்னும் யூக்ளிடியன் வடிவவியலில் அறிஞர் ஆய்வு செய்து இவையிரண்டையும் இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான வழிமுறைகளை வகுத்தளித்தார்.

கணிதம் மற்றும் மொழிபெயர்த்தல் ஆகியவற்றில் மட்டுமல்லாது, இயற்பியல் மற்றும் மருத்துவம் ஆகியவற்றிலும் அறிஞர் சிறந்து விளங்கினார் என்பதற்கான ஏராளமான வரலாற்றுச் சான்றுகள் இருக்கின்றன. இத்துடன் பல்துறைகள் பற்றி 30 க்கு மேற்பட்ட நூற்களையும் அறிஞர் எழுதியுள்ளார். அவற்றில் கீழ்க்காணு நான்கு நூற்களின் அசல் பிரதிகள் மட்டுமே இன்றுவரை பாதுகாக்கப்படுகின்றன.

- the Composition of Ratios (விகிதங்களின் கலவை)
- the Sector which deals with Menelaus' theorem.- (மெனலாஸ் தேற்றத்துடன் தொடர்புடைய துறை)
- Book of the Steelyard (Kitab fi 'l-qarastun) ஸ்டீல்யார்ட் பற்றிய நூல்
- Book on the Description of Weight (Kitab fi sifat alwazn ) எடை விளக்கம் பற்றிய புத்தகம்

## அறிஞரின் மரணம்:

அறிஞர் தனது எழுபத்தி ஏழாம் வயதில் ஹிஜ்ரி 288 / கிபி 836 ஆம் ஆண்டு பக்தாத்தில் நோய்வாய்ப்பட்டு மரணமடைந்தார்கள். நாணயம் மாற்றுபவராக தனது வாழ்க்கையை தொடங்கி, "பனு மூஸா" சகோதரர்களின் மூலம் கல்விக்கான வாய்ப்பை அல்லாஹ் கொடுத்தபோது, அதை மிகச் சரியாக பயன்படுத்தி, இன்றுவரை தன்னை வரலாற்றில் நிலைநிறுத்திக் கொள்ளுமளவிற்கு மிகச்சசிறந்த அறிஞராக தன்னை உருவாக்கிக் கொண்டதும், தனக்கு கிடைத்த அறிவாற்றலை தனது அர்ப்பணிப்பால் பல அறிஞர்களை உருவாக்கி, காலமுழுவதும் மக்களுக்கு பலனளிக்க கூடியதாக விட்டுச் சென்றிருப்பது நமக்கு மிகப்பெரும் படிப்பினையாகும்.

கல்வியைக் கற்றுக்கொள்ளவதற்காக அல்லாஹ் நமக்கு கொடுக்கும் எந்த சந்தர்ப்பத்தையும் தவறவிட்டுவிடாமல் நன்றாக பயன்படுத்தினால். அல்லாஹ்வின் கிருபையால் நாமும் மக்களுக்கு பலன்தரும் கல்வியை விட்டுச் செல்லலாம். அல்லாஹ் அதற்கு அருள்புரிவானாக!...

(தொடரும்...)


Eid Mubarak



# அழிவுகள் சோதனையா? தண்டனையா?

– மௌலவி யூனுஸ் தப்ரீஸ்

இன்று உலகத்தில் அடிக்கடி பலவித மான அசம்பாவிதங்கள் இடம்பெற்று வருவதை நேரடியாக கண்டு வருகின்றோம்.

தொடர் மழையினால், வெள்ளப்பெருக்கு ஏற்படுவதால், கடல் கொந்தளிப்பதால், பூகம்பம் ஏற்படுவதால், மண் சரிவு ஏற்படுவதால், இது போன்ற திடீர் அழிவுகளினால் எதிர்பாராத மனித உயிர்கள் பலியாவதுடன், கோடிக்கணக் கான பொருளாதார சேதங்களும் ஏற்படுவதை காண்கின்றோம்.

இறைவன் இந்த அழிவுகளை அடியார் களுக்கு சோதனையாக கொடுக் கின்றானா? அல்லது தண்டனையாக கொடுக்கின்றானா என்பதை தொடர்ந்து இந்த தொகுப்பில் கவனிப்போம்.

நூஹ் நபி உடைய காலத்தில் இருந்து உலகம் அழிகின்ற வரை இப்படியான அழிவுகள் மாறி, மாறி நடக்கும் என்பதை குர்ஆனும், ஹதீஸூம் எங்களுக்கு எச்சரிப்பதை காணலாம்.

இறைவனுடைய சோதனை மூமின் களுக்கு இந்த உலகில் கஷ்டமாக இருந்தாலும், மறுமை நாளில் ஓர் அருளாக அமைந்து விடும். அதே நேரம் பாவிகளுக்கு இந்த உலகத்திலும் மறு உலகத்திலும் தண்டனையாக அமைந்து விடும்.

இறை சோதனையிலிருந்து எவரும் தப்பிக்க முடியாது என்பதை ஆழமாக மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

தனிமனித சோதனையிலிருந்து சமுதாயம் வரை சோதிக்கப்படுவதை வரலாற்றில் காணலாம்.

## சோதனைகள் பற்றி சில வசனங்கள்...

சோதனைகள் பற்றிய சில குர்ஆன் வசனங்களை முதலில் கவனிப்போம்.

**“பயம், பசி மேலும், பொருள்கள், உயிர்கள், கனிவர்க்கங்கள் ஆகியவற்றில் நஷ்டத்தைக் கொண்டு நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். (நபியே! இச்சோதனைகளால் ஏற்படும் கஷ்டங் களைச்) சகித்துக் கொண்டிருப்பவர் களுக்கு நற்செய்தி கூறுவீராக.**

**(அல்குர்ஆன் : 2:155)**

மேலும், **“உங்களுக்கு முன் சென்றவர் களுக்கு ஏற்பட்டது போன்றது உங்களுக்கும் வராமல் நீங்கள் சுவர்க்கம் நுழையலாம் என்று எண்ணிக் கொண்டி ருக்கிறீர்களா? அவர்களை வறுமையும், துன்பமும் பிடித்தன. மேலும், அத்தூதரும், அவருடன் நம்பிக்கை கொண்டோரும் ‘அல்லாஹ்வின் உதவி எப்போது வரும்‘ என்று கூறுமளவுக்கு அவர்கள் ஆட்டி வைக்கப்பட்டனர். அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக**

அல்லாஹ்வின் உதவி சமீபத்திலேயே இருக்கின்றது. (அல்குர்ஆன் 2:214)

மேற்சுட்டிக்காட்டிய சோதனைகள் நல்லவர்களுக்கும் வரும், தீயவர்களுக்கும் வரும். இவைகள் பொதுவான சோதனை களாகும்.

## பாவிகளுக்கான சோதனைகள்...

பாவிகளுக்கு கொடுக்கக்கூடிய சோதனைகள் இந்த உலகத்தில் தண்டனையாக கொடுக்கப்படுகின்றது என்பதை பின்வரக்கூடிய குர்ஆன் வசனம் நமக்கு தெளிவுப்படுத்துகின்றது.

“அவர்கள் ஒவ்வொருவரையும் அவர்கள் (செய்து கொண்டிருந்த) பாவத்தின் காரணமாகவே நாம் பிடித்துக் கொண்டோம். அவர்களில் (ஆது மக்களைப் போன்ற) சிலர் மீது நாம் கல்மழை பொழிந்தோம். அவர்களில் (ஸமூது மக்களைப் போன்ற) சிலரை இடிமுழக்கம் பிடித்துக் கொண்டது. அவர்களில் (காரூன் போன்ற) சிலரை நாம் பூமியில் சொருகி விட்டோம். அவர்களில் (ஃபிர்அவ்ன், ஹாமான் போன்ற) சிலரை (கடலில்) மூழ்கடித்தோம். அல்லாஹ் இவர்களுக்கு அநீதி செய்ய வில்லை. எனினும், இவர்கள் (அனை வரும்) தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்டனர். (அல்குர்ஆன் : 29:40)

பாவங்கள் தலை விரித்து ஆடும் பொழுதும், எல்லை மீறிய அநியாயங்கள் நடக்கும் பொழுதும் அவர்கள் செய்த பாவங்களின் காரணமாக சம்பந்தப் பட்டவர்களை அல்லாஹ் கடுமையான முறையில் சோதனை என்ற அடிப்படை யில் தண்டிப்பதை மேற்சென்ற குர்ஆன் வசனம் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

மேலும் அநியாயத்தின் காரணமாக சோதனை என்ற அடிப்படையில் தண்டிக்கப்பட்ட மற்றொரு நிகழ்ச்சியை அல்லாஹ் நமக்கு பின் வரக்கூடிய குர்ஆன் வசனங்களின் மூலமாக காட்சிப்படுத்துகின்றான்.

“தோப்பின் சொந்தக்காரர்களை நாம் சோதித்தவாறே (மக்காவாசிகளாகிய) இவர்களையும், (ஆறு ஆண்டுகள் பஞ் சத்தைக் கொண்டு) நிச்சயமாக நாம் சோதித்தோம். (அத்தோப்புடையவர்கள்) அதிலுள்ள விளைச்சலை (மறுநாள்) அதிகாலையில் சென்று அறுவடை செய்து விடுவோம் என்று சத்தியம் செய்தார்கள்.

எனினும், ‘இன்ஷா அல்லாஹ்’ (அல்லாஹ் நாடினால்) என்று கூறவில்லை.

ஆகவே, அவர்கள் நித்திரையில் ஆழ்ந்தி ருக்கும் போதே உமது இறைவனிடமிருந்து ஓர் ஆபத்து (வந்து) அத்தோட்டத்தைத் முற்றாக துடைத்து (அழித்து) விட்டது.

பயிர்களையெல்லாம் வேருடன் களைந்துவிட்ட மாதிரி (அது அழிந்து) போயிற்று.

(அதை அறியாத தோட்டக்காரர்கள்) விடியற்காலையில் ஒருவருக்கொருவர் சப்தமிட்டு அழைத்து,

‘‘நீங்கள் விளைச்சலை அறுப்பதா யிருந்தால், அதை அறுவடை செய்ய உங்கள் தோட்டத்திற்கு அதிகாலையில் வாருங்கள்’’ (என்றும் கூறிக் கொண்டார்கள்).

(தங்களுக்குள்) ஒருவருக்கொருவர் மெதுவாகப் பேசிக்கொண்டே சென்றார்கள்.

(யாசகம் கேட்கக்கூடிய) ஏழை ஒருவர் (கூட) உங்களிடம் இன்றைய தினம் அதில் நுழையாதிருக்கவும் (என்று மெதுவாகப் பேசிக்கொண்டார்கள்).

தங்கள் எண்ணத்தில் (தங்களுடன் ஓர் ஏழையும் வராது) தடுத்து விட்டதாக எண்ணிக்கொண்டு, அதிகாலையில் சென்றார்கள்.

(சென்று) அதைப் பார்க்கவே, (விளைச்சலெல்லாம் அழிந்து போ யிருப்பதைக் கண்டு “இது நம்முடைய தல்ல; வேறொருவருடைய தோட்டத் திற்கு) நிச்சயமாக நாம் வழிதவறியே வந்துவிட்டோம்’’ என்றார்கள்.

***(பின்னர், அதைத் தங்கள் தோட்டம்தான் என்று அறிந்து) அல்ல. நாம்தான் நம் பலன்களை இழந்து விட்டோம் (என்று கூறினார்கள்).***

***அவர்களிலுள்ள ஒரு நடுநிலையாளன் அவர்களை நோக்கி "(அடிக்கடி) நான் உங்களுக்குக் கூறவில்லையா? (நான் கூறியபடி) நீங்கள் (இறைவனைத்) துதி செய்து கொண்டிருக்க வேண்டாமா?" என்று கூறினார்.***

***அதற்கவர்கள் "எங்கள் இறைவனே! நீ மிக்க பரிசுத்தமானவன்; நிச்சயமாக நாங்கள்தான் (எங்களுக்கு) தீங்கிழைத்துக் கொண்டோம்'' என்று கூறி,***

***பின்னர், அவர்களில் ஒருவர் மற்றொரு வரை நோக்கி, ஒருவர் மற்றவரை நிந்தனை செய்து கொண்டனர்.***

***''நிச்சயமாக நாங்கள் வரம்பு மீறி விட்டோம்; எங்களுக்குக் கேடுதான்'' என்று அவர்கள் கூறினர்.***

***''நிச்சயமாக நாங்கள் எங்கள் இறைவனையே நோக்குகிறோம். எங்கள் இறைவன் இதைவிட மேலானதொன்றை எங்களுக்குத் தரக்கூடும்'' (என்றும் கூறினர்). (அல்குர்ஆன் (68:17...)***

மேற்சொல்லப்பட்ட சம்பவத்தின் மூலமாக அந்தத் தோட்டக்காரர்களின் தோட்டம் ஏன் சோதனை என்ற அடிப்படையில் அழிக்கப்பட்டது என்பதை கவனிப்போம்.

முதலாவது அல்லாஹ் கொடுத்த அருட்கொடைக்கு நன்றி செலுத்தாதது.

இரண்டாவது எந்த ஏழைகளையும் இந்த தோட்டத்திற்குள் அனுமதிக்கக் கூடாது என்று பேசிக்கொண்டது.

மூன்றாவது பெருமையோடு நடந்து கொண்டதாகும்.

இதேபோன்று மற்றொரு நிகழ்ச்சியை பின்வருமாறு அல்லாஹ் நமக்கு காட்சிப்படுத்துகின்றான்.

அல்குர்ஆன் 18:32...40 வசனங்களில் இரண்டு நண்பர்களை அல்லாஹ் உதாரணமாக கூறி, ஒருவருக்கு இரண்டு திராட்சை தோட்டங்கள் உட்பட நிறைய வசதி வாய்ப்புகளை கொடுத்திருந்தான். அந்த வசதி வாய்ப்புகளை அனுபவித்த அந்த நண்பர் மற்ற நண்பரை பார்த்து, பெருமை அடித்து எல்லை மீறி பேசியதன் எதிரொலியாக அல்லாஹ் அந்த தோட்டத்தை அழித்த வரலாறையும் காணலாம்.

இந்த சம்பவத்திலும் இறைவனை நிராகரித்து, அருட்கொடைகளை கொடுத்த இறைவனுக்கு நன்றி செலுத் தாமல் "என்னால்" என்ற பெருமை யினால், அல்லாஹ் அவனுக்கு சோதனையை தண்டனையாக மாற்றி விட்டான்.

மேலும், நூஹ் நபியுடைய காலத்தில் இருந்து நபியவர்கள் காலம் வரை அந்தந்த நபிமார்களை எதிர்த்தவர்கள் எல்லை மீறிய அநியாயங்களை செய்ததோடு, பெருமையடித்து அந்தந்த நபிமார்களுக்கு பல விதமான துன்பங் களை கொடுத்ததின் எதிரொளியாக பல விதமான சோதனைகளை அல்லாஹ் தண்டனையாக பாவிகளுக்கு கொடுத்த காட்சிகளை குர்ஆனில் நேரடியாக காணலாம்.

மேலும், நாம் ஏன் அடியார்களுக்கு தண்டனையை கொடுக்கின்றோம் என்பதை பின்வரும் குர்ஆன் வசனத்தின் மூலமாகவும் அல்லாஹ் சுருக்கமாக சொல்லிக் காட்டுகின்றான்.

**"மனிதர்களின் கைகள் தேடிக்கொண் டதன் காரணமாகக் கடலிலும் தரையிலும் குழப்பம் தோன்றி விட்டது. அவற்றில் இருந்து அவர்கள் விலகிக் கொள்வதற்காக, அவர்களின் தீய செயல்கள் சிலவற்றின் தண்டனையை அவர்களுக்கு (இம்மையிலும்) சுவைக்க வைக்கிறான். (இவ்விதம் சோதிக்கின் றான்) *(அல்குர்ஆன் : 30:41)***

இதுபோன்ற நிறைய சம்பவங்களை குர்ஆனிலும், ஹதீஸிலும் பரவலாக காணலாம்.

பாவிகளுக்கு சோதனைகள் இந்த உலகத்தில் தண்டனையாகவும் மறுமை நாளில் கடுமையான வேதனையாகவும் அமைந்து விடும் என்பதை மேற் சென்ற சம்பவத்தின் மூலமாக அல்லாஹ் நம்மை எச்சரிக்கின்றான்.

## நல்லவர்களுக்கான சோதனை...

நல்லவர்களுக்கான சோதனை பட்டியலில் முதலிடம் வகிப்பவர்கள் நபிமார்களாகும். அடுத்தது அந்தந்த நபிமார்களை ஏற்றுக் கொண்ட இறை விசுவாசிகளாகும்.

இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்ட அத்துனை நபிமார்களும் ஒவ்வொரு விதமாக சோதிக்கப்பட்ட நிகழ்வுகளை குர்ஆன் நமக்கு காட்சிப் படுத்துகின்றது.

அந்த சோதனைகள் அவர்களது ஈமானை பலப்படுத்தவும், அந்தந்த இறை விசுவாசி களான தோழர்களுக்கு முன்மாதிரி யாகவும் அல்லாஹ் அமைத்தான்.

அதேபோன்றுதான் அல்லாஹ்வை ஏற்றுக் கொண்ட அடியார்களையும் அல்லாஹ் வீட்டுக்குள் இருந்து வீதி வரை மாறி மாறி சோதித்துக் கொண்டே இருப்பான்.

இறைவனால் கொடுக்கக்கூடிய சோதனை களை ஏற்றுக் கொண்டு அவற்றில் பொறுமையாக இருந்து, அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வைத்து, அமல்களை நிறைவாக செய்து வந்தால் நிச்சயமாக அல்லாஹ் அந்த சோதனைக்காக வேண்டி சுவர்க்கத்தை தயார் பண்ணி வைத்திருக்கின்றான் என்ற நம்பிக்கை யோடு வாழ வேண்டும்.

***“கஷ்டத்திற்கு பின் இலகு உள்ளது”*** *(94:5)* என்ற வசனத்தின் அடிப்படையில் உலகத்தில் அனுபவித்த கஷ்டங்கள் என்ற சோதனைக்கு பகரமாக அல்லாஹ் தரக்கூடிய உச்சக்கட்டமான அருட்கொடை தான், பல இன்பங்கள் நிறைந்த சுவனமாகும்.

## சோதனைகள் எதற்காக...

இந்த உலகத்தில் பல விதமான சோதனைகளை எதற்காக மாறி, மாறி அல்லாஹ் தருகின்றான் என்பதை பின்வரும் குர்ஆன் வசனங்கள் மூலமாக அல்லாஹ் நமக்கு தெளிவுப்படுத்து கின்றான்.

***“உங்களில் மிகத்தூய்மையான அமல் செய்பவர்கள் யார் என்று சோதிப்பதற் காகவே, அவன் மரணத்தையும், வாழ்க்கையையும் படைத்திருக்கிறான். அவன் (அனைவரையும்) மிகைத்தவன்; மிக மன்னிப்புடையவன் ஆவான்.***

***(அல்குர்ஆன் : 67:2)***

சோதனைகள் எதற்காக என்பதை இந்த குர்ஆன் வசனம் அழகான முறையில் நமக்கு வழிகாட்டுகின்றது.

உலகத்தில் நடக்கும் ஒவ்வொரு மரணத்தையும் நாம் பார்க்கும் பொழுது நானும் ஒரு நாள் மரணிக்கத்தானே போகின்றேன். நான் மறுமைக்காக வேண்டி என்ன அமல்களை செய்து கொண்டிருக்கிறேன் என்பதை திரும்பிப் பார்த்து, நம்மை சீர்படுத்திக் கொள்வ தற்காக மரணத்தை அல்லாஹ் படைத்திருப்பதாக கூறுகிறான்.

நாம் ஒரு ஜனாஸாவை பார்க்க செல்லும் போது இந்த ஜனாஸாவாக நான் இருந்தால் என்று அந்த இடத்தில் சிந்தித்து, நான் எந்த அளவுக்கு அல்லாஹ்வின் பக்கம் அமல் ரீதியாக சார்ந்து இருக்கின்றேன் என்பதை உணர வேண்டும்.

அதேபோல அனர்த்தங்கள் ஏற்படும் போது கோடிக்கணக்கான சொத்துக்கள் கண் முன்னே அழிந்து போகக்கூடிய காட்சிகளையும், பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புகள் ஏற்படும் காட்சிகளையும் நேரடியாக பார்க்கும் போது இவ்வளவு தான் வாழ்க்கை என்பதை நமது வாழ்க்கையை திரும்பிப் பார்த்து, அந்தக் கட்டத்திலும் நாம் அல்லாஹ்வை சார்ந்து இருக்கக்கூடிய நிலையை மாற்றிக் கொள்வதற்காக வேண்டி தான் இந்த சோதனைகள் என்பதை புரிந்து கொள்வோம்.

## தவ்பிக் மேன்பவர் கன்சல்டன்ட்ஸ் (பி) லிட்

TAUFIQ MANPOWER CONSULTANTS (P) LTD

B0724/TN/COM/1000+/5/5971/2002

மத்திய அரசு அனுமதி பெற்ற நிறுவனம்

### உள்நாடு மற்றும் வெளிநாடு வேலை வாய்ப்பு

**வெல்டர்கள், ஃபிட்டர்கள், வெயிட்டர்கள், சமையல்காரர்கள், கொத்தனார்கள், எலக்ட்ரீஷியன்கள், பாதுகாப்புக் காவலர்கள், கார் / பைக் / பேருந்து ஓட்டுநர்கள், மற்றும் பிற.**

Other Services (இதர சேவைகள்):

- Flight Tickets - விமான டிக்கெட்டுகள்,
- Visa Services - விசா சேவைகள்,
- Immigration Clearance - இமிகிரேஷன் கிளியரன்ஸ்,
- Certificate Attestation - சான்றிதழ் சான்றளிப்பு சேவைகள்

## TAUFIQ MANPOWER CONSULTANTS (P) LTD

30, THIRUVENGADAM STREET,PUDUPET,CHENNAI-600002.

044-28419682, 28546050, 28513303, 43592272

taufiqshaik076@gmail.com, www.taufiqmanpower.com

Ministry of External Affairs · IATA · TNV United Kingdom · AB-CAB · ISO 9001:2015 Certified · Celebrating 23 Years of Excellence · IAAI · TAAI Since 1951 · TAFI The Way Forward

### Overseas Offices:

Malaysia

**TAUFIQ MANAGEMENT SDN. BHD.**
C- 3A- 03 BLOCK C SETIA WALK,
PERSIARAN WAWASAN,
PUSAT BANDAR PUCHONG,
47160 PUCHONG SELANGOR.

DUBAI

**TAUFIQ HR CONSULTANCIES LLC,**
POST BOX NO:77106, Office 49,
M-Floor Abudlla Kamber Business Center
Bldg Hor Al Anz , Dubai-UAE

**சென்னையில் வெளியூர் வாசிகள் குடும்பத்துடன் பாதுகாப்பாக தங்குவதற்கு சென்னை எழும்பூர் இரயில் நிலையம் எதிரில் அனைத்து வசதிகளுடன் ரூம்கள் வாடகைக்கு கிடைக்கும்**

**TAUFIQ INN GUEST HOUSE**
#5, Gandhi Irwin Road, Egmore,
Chennai – 600 008.
( Opp Egmore Railway Station)
044 – 28193303, 28193033.

**HOTEL SAFRA (LODGING)**
# 99(OLD # 67), Adithanar Road,
Pudupet, Chennai – 600002
(Near Egmore Court).
Ph: 044 2854 2230, 2854 2231, 8807868055.

# இமாதுத்தீன் ஸங்கி -

## "மார்க்கத்தின் தூண்" (அடித்தளமிட்டவர்) கி.பி.1084 - 1146

- அம்ரு பின் தாவூது - வேதாளை

### கள நிலவரம் - கலவரம்:

### சிதறுண்ட முஸ்லிம் சமூகம்

சிதறிய கூட்டம் செய்வதறியாது தவிக்கும். அவ்விடத்தில் இரண்டு விதமான அணியினர் உருவாகுவர். ஒன்று அக்கூட்டத்தைப் பயமுறுத்தி அதை ஆள நினைக்கும் ஓரணியினர். மற்றொன்று, அதை ஒழுங்குபடுத்தி அதை ஆள வைக்கும் அணியினர் உருவாகும்.

இதில் முதல் அணியினரின் அச்சுறுத்தலும் அவர்களின் ஆதிக்கச் சூழல் ஏற்படுதலும் இயல்பே. அது உடனடியாகவும் சர்வ சாதாரணமாகவும் நடைந்தேறும். ஆனால், இரண்டாம் அணி உருவாவதில்தான் சிக்கலும் சவாலும் நிறைந்து காணப்படும். ஏனெனில், இவ்வாறான இரண்டாம் அணி உருவாவதற்கும், இம்மாதிரியான சிந்தனை சிந்தையில் உதிப்பதற்கும் முன்பாகவே, சிதறுண்ட சமூகத்தில் எதிரிகளின் ஆதிக்க ஆட்சி கோலோச்சிக் கொண்டிருக்கும்.

அன்றைய தினம் மத்திய கிழக்கில் மூன்று வகையான பிரிவினர் இருந்தனர்.

1. வலுவிழந்த அப்பாஸிய கிலாபத்
2. பரங்கியரின் ஆக்கிரமிப்பு ஆட்சி
3. வழிகெட்ட பாத்திமிய ஷீஆக்களின் ஆட்சி

### சகோதரருள் பிரிவினையும் பகைமையும்

சகோதரராய்த் திகழ வேண்டிய முஸ்லிம் சமூகத்தின் சிற்றரசர்கள் தங்களுக்குள் போட்டியும் பொறாமையும் கொண்டோராகத் திகழ்ந்தனர். அதன் விளைவாக ஒன்றுபட்ட இஸ்லாமிய கிலாபத் தனித்தனித் தீவாகக் காட்சியளித்தது.

பெரும் தேசமாய் ஒன்றுபட்ட அகன்ற கிலாபத்தாக இல்லாமல், தனித் தீவாக இஸ்லாமிய கிலாபத் மாறியதன் விளைவு, பரங்கியர் இஸ்லாமிய நிலப்பரப்புகளில் தங்களின் மேலாதிக்கத்தை நிலை நிறுத்த ஆரம்பித்தனர்.

முஸ்லிம் தலைமையும் முஸ்லிம்களின் தலைமைத்துவமும் சிதைந்ததால், எதிரிகள் நம்மைத் தலைமைத் தாங்கினர்.

இதிலும் பெருத்த கேவலம், முஸ்லிம்கள் தங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கும் சச்சரவுகளுக்கும் தங்களை அழிக்க வந்த, பரங்கியர்களை நீதிபதிகளாகவும் தலைவர்களாகவும் ஆக்கி தன்மானத்தை இழந்திருந்தது. அதிலும் பெருத்த கவலைக்குரிய விடயம், தாம் தன்மானத்தை இழந்துவிட்டோம் என்பதே தெரியாமல் இருந்து கொண்டிருந்தனர்.

அவர்களுக்குள் பிரச்சினை முற்றி தலைக்கு மீறியதாக உருமாறினால், அந்நிய பரங்கியருடன் ஒன்று சேர்ந்து தன் முஸ்லிம் சகோதரனுடம் சண்டையும் செய்வர்.

## சிம்ம சொப்பனம் / தொடாக் கூட்டம்

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் எண்ணிக்கையிலும் ஆயுத பலத்திலும் பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருந்த முஸ்லிம்கள் ஆட்சியாளர்கள் கிறித்தவ பரங்கியரைக் கண்டு தொடை நடுங்கினர். முஸ்லிம்களின் நிலத்தைக் கைப்பற்றிக் கொண்டு, முஸ்லிம்களின் கண்ணிலேயே விரல் விட்டு ஆட்டிக் கொண்டிருந்தனர். முஸ்லிம்களின் எண்ணத்திலும் செயல்பாட்டிலிலும் தென்பட்ட சோர்வு, நம்பிக்கை இழப்பு, தொடர் தோல்வி யாவும் அவர்களை இந்நிலைக்குத் தள்ளியது.

இது முஸ்லிம்கள் தங்களுக்குத் தாங்களே செய்து கொண்ட வினையாகும். இது நபிகளாரின் முன்னறிவிப்பின் நிதர்சனமும் விளைவுமாகும். நபிகளாரின் ஒரு ஹதீஸில் கீழ்க்கண்டவாறு வந்துள்ளது.

உணவு உண்பவர்கள், (ஒருவர் மற்றொருவரை) உணவுத் தட்டை நோக்கி அழைப்பது போன்று, (எதிரி) சமூகங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து உங்களுக்கெதிராகச் செயல்பட அழைத்துக்கொள்வார்கள் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அப்போது ஒருவர், 'அந்நேரம் நாங்கள் எண்ணிக்கை குறைந்தவர்களாக இருப்போமா?' எனக் கேட்டார்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'இல்லை, அந்நேரம் நீங்கள் எண்ணிக்கை கூடியவர்களாக இருப்பீர்கள். எனினும் நீங்கள் வெள்ளத்தில் அடிபட்டுச் செல்லும் சருகுகளைப் போன்று இருப்பீர்கள். இன்னும், உங்களைப் பற்றிய பயத்தை உங்கள் எதிரிகளின் உள்ளங்களிலிருந்து அல்லாஹ் கழற்றி எடுத்துவிட்டு, உங்கள் உள்ளங்களிலே 'வஹ்ன்' எனும் சிந்தனையைப் போட்டு விடுவான்' எனக் கூறினார்கள். 'அல்லாஹ்வின் தூதரே! 'வஹ்ன்' என்றால் என்ன?' என ஒரு மனிதர் கேட்க, 'உலகத்தை நேசிப்பதும், மரணத்தை வெறுப்பதும், என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*(அறிவிப்பவர்: ஸவ்பான் (ரலி); அபூதாவூத்: 4297)*

இந்த ஹதீஸ் வரலாற்றில் பல தடவைகள் முஸ்லிம்கள் மத்தியில் நிகழ்ந்துள்ளன. மேற்கூறப்பட்ட குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வு அதிலொன்றாகும். இருப்பினும், காலம் எப்போதும் ஒருநிலையிலோ ஒரு தரப்பினரின் எழுச்சியிலோ இருக்காது. இறைவனின் காலச் சக்கரம் எல்லோரின் மீதும் தகுந்த நேரத்தில் இறைவனால் சுழற்றப்படும். அது மத்திய கால பலவீனமான முஸ்லிம்கள் மத்தியிலும் சுழற்றப்பட்டது. அதன் அச்சாணியாக சுல்தான் இமாதுத்தீன் ஸங்கீ திகழ்ந்தார்.

## களமேலாண்மை – பேராண்மை:

## பிரச்சனையை இனங்காணல்

*11 மற்றும் 12ஆம் நூற்றாண்டில், இஸ்லாமிய உலகத்தில் நிலவிய அசாதாரணமான சூழலை உணர்வதற்கு, எந்த உணர்வாளரும் இல்லாச் சூழலில் அல்லாஹ்வால் உருவாக்கப்பட்ட உணர்வாளரே, இமாதுத்தீன் ஸங்கீ ஆவார். முஸ்லிம்களின் நிலையை கண்ணுற்றார். நபிகளாரின் வருகைக்குப்*

பிற்பாடு வந்த, ஒப்பற்ற உயர்ந்த முஸ்லிம்களின் மூன்று நூற்றாண்டுகளின் வரலாற்றுச் சுவடுகளையும் தற்போதுள்ள தாழ்ந்த நிலையையும் கண்டு, பிரச்சனைகளையும் அவற்றின் காரணங்களையும் இனம் கண்டார்.

### பிரச்சனையைச் சரிசெய்தல்

இனங்காணப்பட்ட பிரச்சனைகளையும் அதன் காரணங்களையும் ஒன்றன்பின் ஒன்றாகச் சரிசெய்யும் சீர்செய்யும் பொறுப்பைத் தன்மீதான கடமையாகக் கொண்டு களமாட முயற்சித்தார்.

### 1. சிதறிய சமூகத்தை ஒன்றிணைத்தல்

இஸ்லாம் என்றால் சகோதரத்துவம், சமத்துவம், சமூக ஒற்றுமை என்கிற அடித்தளத்தையும் அதன் இலக்கணத்தையும் மீட்டுருவாக்கம் செய்தார், இமாதுத்தீன் ஸங்கீ.

அவர் மனங்களால் பிரிந்த! குணங்களால் இறந்த மாகாண சிற்றரசுகளை அவர் வாழும் காலத்தில் பெருமளவில் ஒன்றிணைப்பதில் வெற்றி கண்டார்.

### 2. இடிந்த சகோதரத்துவத்தை உருவாக்குதல்

“முஃமின்கள் யாவரும் சகோதரர்களே!” என்ற இறைவசனத்தின் சகோதரத்துவக் கோட்பாட்டின் கோட்டையால் கட்டப்பட்ட இஸ்லாமிய சகோதரத்துவத்திற்கு மீள் கட்டுமானம் தேவைப்பட்டது. இஸ்லாமிய சகோதரத்துவத்தின் முக்கியத்துவத்தையும் நன்மைகளையும், பயன்களையும், எழுச்சிகளையும் அடிக்கடித் தொடர்ச்சியாக முஸ்லிம் சமூகத் தலைவர்களுக்கு எடுத்துத்துரைத்தார். அதிலும் வெற்றியும் பெற்றார்.

### 3. இறந்த தன்னம்பிக்கையை உயிரேற்றுதல்

பரங்கியரின் தொடர் தாக்குதல்களாலும் தங்களுக்குள் நிலவிய ஒற்றுமையின்மையாலும் தன்னுடைய பாரம்பரியத்தையையே மறந்த சமுதாயமாக, இஸ்லாமிய சமூகம் உருமாறியிருந்தது. அது தன்னுடைய ஒட்டுமொத்த தன்னம்பிக்கையையும் இழந்து, கோழைத்தனத்தின் அடையாளமாகவே மாறியிருந்தது. தாழ்வு மனப்பான்மையில் தாழ்ந்திருந்த முஸ்லிம் சமூகத்தை, இறந்த பூமியை அல்லாஹ் நீரிட்டு உயிராக்குவது போல், இமாதுத்தீன் அவர்கள் தன்னம்பிக்கையை ஊட்டி முஸ்லிம்களுக்கு மத்தியில் உரமேற்றினார்; உயிரூட்டினார்.

### 4. தொடாக் கூட்டத்தைத் தொடை நடுங்கச் செய்தல்

இமாதுத்தீன் ஸங்கி அவர்கள் முஸ்லிம்களிடத்தில் விதைத்த உரம் சாதாரணமான உரமன்று. மாறாக, ஈமானிய உரம். அதன் பயன் அதை அடைந்தவருக்கு மட்டுமே தெரியும். அந்த ஈமானிய உரம், உள்ளத்தில் ஆழப்பதிந்து உணர்வில் உயிரூட்டியது. விளைவு, பரங்கியரை எதிர்த்து முஸ்லிம்கள் களமாட கலப்பிடமில்லா மனதுடன் உறுதியேற்றனர்.

இந்த ஓர் உறுதி மட்டும் போதுமே, எதிரிகளை முடிப்பதற்கு, அவர்களின் நிலையை கலங்க வைப்பதற்கு! இஸ்லாமிய வரலாற்றில் நபிகளாரால் உருவாக்கப்பட்ட முதல் போர்ப்படை வீரர்களான ஸஹாபாக்களுக்குள், நபிகளார் விதைத்து, அதன் பயனையும் பலனையும் உலகமே கண்டு வியந்த நிதர்சனமான சாட்சியல்லவா அது!

முஸ்லிம்கள் ஒன்றிணைந்துவிட்டனர்; நம்மை எதிர்க்க ஆயத்தமாகி விட்டனர் என்ற தகவலால், பரங்கியர்கள் உள்ளம் அதிர்ந்து, உடல் வியர்த்து, தொடை நடுங்கி, தன்னிலையை மறந்தே போயினர்; அதுவே, அவர்களின் முதல் தோல்வியாகவும் அமைந்தது.

### 5. இழந்த கண்ணியத்தை மீட்டெடுத்தல்

திட்டம் இலக்கு முயற்சி அடைதல் – அடையும் வாய்ப்பை ஏற்படுத்துதல் – அடையும் மாந்தரை உருவாக்குதல்.

மேற்கண்ட உறுதிமொழியையும் உயர் வாழ்வியல் கோட்பாடுகளையும் முஸ்லிம்களின் மனதில் ஏற்றினார். விளைவு, முஸ்லிம் உலகத்தை சுமார் ஐம்பது ஆண்டுகாலம் பிடித்திருந்த அடிமை விலங்கையும், அச்ச நோயையும், இழந்த கண்ணியத்தையும் இறையுதவியுடன் இமாதுத்தீன் ஸங்கீ மீட்டெடுத்தார்.

### (10) இமாதுத்தீனின் கொலை:

### "அர்ரஹா"வைக் கைப்பற்றுதல்

இமாதுத்தீனின் வாழ்நாளில் மிக உயர்ந்த – மிகப் பெரிய சாதனை என்று வரலாற்றாசிரியர்களால் பார்க்கப்படுகிறது.

ஆனால் அந்த மாபெரும் வெற்றியிலிருந்து வெறும் இரண்டு ஆண்டுகள் கடந்த பின், ஹிஜ்ரி 541 ரபீஉல் ஆகிர் 6 (கி.பி.1146 செப்டம்பர் 15) அன்று அவர் "ஜஅபர்" (قلعة جعبر) கோட்டையை முற்றுகையிடும் போது கொலை செய்யப்பட்டார்.

அவரது சொந்த காவல் படையின் தலைவர் "யர்நக்ஷ்"என்பவன், ஓய்வு அறைக்குள் ஊடுருவி அவர் தூங்கிக் கொண்டிருக்கும் போதே கழுத்தை அறுத்து கொன்றான்.

பல வரலாற்றாசிரியர்கள் இந்தக் கொலையைத் தனிப்பட்ட சண்டை/ பகை காரணமாக நிகழ்ந்தல்ல; மாறாக, அரசியல் காரணங்களால் நடந்தது எனக் கூறுகிறார்கள்.

ஏனெனில், இமாதுத்தீன் அப்போது சிலுவையர்களை எதிர்த்து மிகப் பெரிய வெற்றியின் உச்சியில் இருந்தார். அவர் இஸ்லாமியப் படைகளை ஒன்றிணைத்து, ஒரு பெரிய ஒற்றுமை முனைப்பை உருவாக்கியிருந்தார். மேலும், அதே சமயம் ஜஅபர் கோட்டை முற்றிலும் வீழப்போகும் நிலையில் இருந்தது.

மேலும் கொலை செய்த யர்நக்ஷ் பாத்தினி / பத்தினியா (الباطنيّة Assassin faction / ஷீஆ நிஜாரி இஸ்மாயிலி) பிரிவைச் சேர்ந்தவன். நீண்ட காலம் பொறுமையாக நயவஞ்சகத்துடன் காத்திருந்து, சரியான தருணத்தில் தாக்குவதில் நிபுணர் என்று வரலாறு கூறுகிறது.

அவ்வாறு, இமாதுத்தீன் தனது 62 ஆவது வயதில், புகழின் உச்சிப்பகுதியிலும் சிலுவை அரசிற்கு சிம்ம சொப்பனமாகவும் இருந்த தருணத்தில் ஷீஆ நயவஞ்சகர்களால் அவர் கொலை செய்யப்பட்டார்.

### இமாதுத்தீன் மார்க்கத்தின் தூண்:

- அவர் ஒரு தூண்! அந்தத் தூண், நிலைப்புத்தன்மையற்ற (யாராலும் சரிசெய்ய முடியாது என்று நம்பிக்கையிழந்து கைவிடப்பட்ட) கோட்டையை நிலைநிறுத்திக் காட்டியது. அது பல தூண்கள் உருவாக அடித்தளமாகவும் அச்சாணியாகவும் திகழ்ந்தது. அத்தூண் நம்பிக்கையின் அடையாளமாக பின்னுள்ளவர்களுக்கு அமைந்தது.
- அவர் வெறும் விதையே! அந்த விதையிலிருந்து மாபெரும் ஒரு மரம் வளர்ந்து, அது ஆயிரம் மரங்களை உருவாக்கிவிட்டுச் சென்றது.
- வரலாறு படிப்போம்!; பாடங்கள் அறிவோம்!; வரலாறு படைப்போம்!; வரலாறு நமக்கான முன்மாதிரி, வழிகாட்டி, அறிவுரை, அறவுரை!!!

தொடரும் இன்ஷா அல்லாஹ்

தொடர்
56

# ஷரஹுஸ் ஸுன்னா

அரபி மூலம்: இமாம் அல் பர்பஹாரி (ரஹ்)
தமிழில்: பஷீர் ஃபிர்தவ்ஸி

**இமாம் பர்பஹாரி அவர்கள் கூறினார்: அறிந்து கொள்ளுங்கள் நிச்சயமாக நன்மையும், தீமையும் அல்லாஹ்வின் களா கத்ரில் உள்ளதாகும்.**

**உயர்ந்தவனும் பரகத்மிக்கவனுமாகிய அல்லாஹு தூர் மலையின் அருகில் வைத்துமூஸா (அலை)அவர்களிடம் உரையாடினான்.**

**மூஸா (அலை)அவர்கள் அல்லாஹ்வின் பேச்சின் சப்தத்தை செவிமடுத்தார்கள் அது அவர்களின் காதிலேயே எதிரொலித்தது வேறு எந்த பேச்சையும் அவர் கேட்கவில்லை இது அல்லாத வேறு கருத்தை யார் கூறுவானோ அவன் காஃபிர் ஆவான்.**

## விளக்கம்:

அல்லாஹ்விற்கு பேசுதல் என்ற பண்பை உறுதி செய்வது அஹ்லுஸ் ஸுன்னாவின் அடிப்படைக் கொள்கையில் ஒன்றாகும். அல்லாஹ் உண்மையாக பேசக்கூடியவன் ஆவான். அவனது பேச்சை ஜிப்ரீல் அவர்கள் செவிமடுத்துள்ளார் மூஸா அவர்கள் செவிமடுத்துள்ளார் அல்லாஹ் கூறுகிறான்.

**அல்லாஹ் மூஸாவுடன் உறுதியாக பேசியுமிருக்கின்றான். 4:164**

அல்லாஹ் தவ்ராத்தை வழங்குவதாக வாக்களித்த போது அவன் வாக்களித்த இடத்திற்கு வாக்களித்த நேரத்தில் வந்த போது அல்லாஹ் மூஸா அவர்களிடம் பேசினான். தவ்ராத்தின் ஏடுகளை எழுதப்பட்டதாகவே வழங்கினான் மூஸா அவர்கள் அல்லாஹ்வின் பேச்சை கேட்டார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: **மேலும், நாம் குறிப்பிட்ட நேரத்தில் மூஸா வந்து அவருடைய இரட்சகனும் அவருடன் பேசிய பொழுது... 7:143**

நமது தூதர் முஹம்மத் அவர்களிடம் மிஃராஜின் போது பேசினான் ஐந்து நேர தொழுகையை கடமையாக்கினான் அல்லாஹ் அவன் நாடுகிறபோது நாடியதை பேசக்கூடியவன் ஆவான் அதை அவன் விரும்பியவர்களை செவியேற்கச்செய்யக்கூடியவனுமாவான் ஜஹ்மியாக்களும், முஃதஸிலக்களும் அல்லாஹ் பேசமாட்டான் அல்லாஹ் விற்கு பேசுதல் என்ற பண்பு இல்லை அப்படி அல்லாஹ்விற்கு பேசுதல் என்ற பண்பு இருப்பதாக உறுதிசெய்தால் அது படைப்புகளோடு அவனை ஒப்பிடுவதாகும் ஏனெனில் படைப்புகள் பேசுவார்கள் என்று வாதிடுகிறார்கள்!

அல்லாஹ்வின் பேச்சை படைப்புகளின் பேச்சுடன் ஒப்பிடுவதா? எத்தகைய மடமையான வாதம் அல்லாஹ்வின் பேச்சு வேறு படைப்புகளின் பேச்சுவேறு

என்பதை வேறுபடுத்திப் பார்க்கத் தெரியாதவர்கள் தான் இத்தகைய வாதத்தை முன்வைக்கக்கூடியவர்கள் இன்னும் அவர்கள் அறிவும், சிந்தனையும் அற்றுப்போனவர்கள் ஆவார்கள்.

அல் குர் ஆன் அல்லாஹ்வின் வார்த்தை யாகும் தவ்ராத் அல்லாஹ்வின் வார்த்தையாகும் இஞ்ஜீல் அல்லாஹ்வின் வார்த்தையாகும்!

வேறு எந்த பேச்சையும் அவர் கேட்கவில்லை.

தூர் மலை அடிவாரத்தில் மூஸா (அலை) அல்லாஹ்வின் சப்தத்தை தான் கேட்டார்களே தவிர வழிகேடர்கள் கூறுவது போன்று மரத்தின் சப்தத் தையோ லௌஹுல் மஹ்ஃபூளுடைய சப்தத்தையோ ஜிப்ரீல் அவர்களின் சப்தத்தையோ செவியுறவில்லை.

இது அல்லாத வேறு கருத்தை யார் கூறுவானோ அவன் காஃபிர் ஆவான்.

யார் அல்லாஹ்வின் பேச்சு படைக்கப் பட்டதாகும் என்று கூறுவானோ அல்லது அல்லாஹ் பேசமாட்டான் அவனுக்கு பேசுதல் என்ற பண்பு இல்லை என்று கூறுவானோ அவன் காஃபிராவான் ஏனெனில் அவன் அல்லாஹுவையும் அவனது தூதரையும் இன்னும் முஸ்லிம்களின் இஜ்மாவையும் பொய்யாக்கக்கூடியவன் ஆவான். ஒருவன் அறிவிலியாகவோ, அல்லது அறியாமையால் மாற்றுவிளக்கம் கொடுப்பவனாகவோ அல்லது தக்லீத் செய்யக்கூடியவனாகவோ இருந்தால் அவனைக்குறித்து நல்லெண்ணம் கொண்டு அவனை காஃபிராக்காமல் அவனுக்கு அதனை தெளிவுபடுத்த வேண்டும் அதன் பின்னரும் பிடிவாத மாக மறுத்தால் அவன் காஃபிர் என்று தீர்ப்பளிக்க வேண்டும்.

ஏனெனில் பேசுவதற்கு ஆற்றல் இல்லாத சிலைகளை வணங்கும் இணைவைப் பாளர்களை அல்லாஹ் இழிவாக கூறியுள்ளான்.

அவர் தன் தந்தையிடம், **“என் அருமைத் தந்தையே! எதையும் கேட்க இயலாத, பார்க்க இயலாத உங்களுக்கு எந்தத் தேவையையும் பூர்த்தி செய்ய இயலாதது மான ஒன்றை ஏன் நீங்கள் வணங்கு கிறீர்கள்?” என்று அவர் கூறியதை நினைவுகூர்வீராக. 19:42**

சிலைகளை வணங்கக்கூடிய நிராகரிப் பாளர்களைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்.

**அவர்கள் பேசக்கூடியவர்களாக இருந்தால் அவர்களையே கேளுங்கள்! என்று கூறினார். 21:63**

பனூ இஸ்ராயிலியர்களைக் குறித்து அல்லாஹ் கூறுகிறான்: **மூஸாவின் சமூகத்தார் அவர் (சென்ற) பின் தங்கள் நகைகளைக் கொண்டு ஒரு காளைக் கன்றின் சிலையை(ச் செய்து அதைத் தெய்வமாக) ஆக்கிக் கொண்டார்கள்; அதற்கு (மாட்டின் சப்தத்தைப் போல் வெறும்) சப்தமிருந்தது; நிச்சயமாக அது அவர்களிடம் பேசவும் மாட்டாது, இன்னும் அவர்களுக்கு வழி காட்டவும் செய்யாது என்பதை அவர்கள் கவனித்திருக்க வேண்டாமா. 7:148**

நிச்சயமாக படைப்பாளன் பேசக்கூடி யவன் என்பதை இது தெரிவிக்கிறது பேசுவதற்கு ஆற்றல் இல்லாதது படைப்புகளின் இரட்சகன் அல்ல.

பேசுவதற்கு சக்தியற்றதாக இருக்கும் அது எப்படி கட்டளைகளைப் பிறப்பிக்கும்? எப்படி விலக்கும்? இன்னும் உலகத்தை எப்படி நிர்வகிக்கும் இத்தகைய குறை களை விட்டும் அல்லாஹ் தூய்மையான வனாக இருக்கிறான்.

# ஜமாஅத்தின் செய்திகள்

**தமிழகம் முழுவதும் ஜம்யிய்யத்து அஹ்லில் குர்ஆன் வல் ஹதீஸ் அமைப்பு மூலம் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள்..**

## 2025 டிசம்பர் மாதம் திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற பணிகள்

*19.12.25* வெள்ளிக்கிழமை காலை ஃபஜர் தொழுகைக்கு பின்பு மஸ்ஜிதுர் ரஹ்மான் பள்ளியில் வைத்து மார்க்க விளக்க வகுப்பு நடைபெற்றது இதில் மௌலவி A. அன்ஸாரி பிர்தவ்சி அவர்கள் ஜுலைபீப் (ரலி) வரலாறும், படிப்பினையும் என்கின்ற தலைப்பில் வகுப்பு நடைபெற்றது.

*19.12.25* வெள்ளிக்கிழமை மாலை *5: 20* மணி முதல் JAQH பாலசமுத்திரம் கிளையின் சார்பாக பள்ளிவாசல் தெருவில் வைத்து மார்க்க விளக்க தெருமுனை பிரச்சாரம் நடைபெற்றது இதில் மௌலவி A. அன்ஸாரி பிர்தவ்ஸி அவர்கள் எது நேரான வழி என்கின்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்கள்.

*19.12.25* வெள்ளிக்கிழமை மாலை மஃரிப் தொழுகைக்குப் பிறகு JAQH திண்டுக்கல் கிளையின் சார்பாக மஸ்ஜிதுத் தக்வா பள்ளியில் வைத்து மார்க்க விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது இதில் மௌலவி M. அய்யூப் அலி ஃபைஜி அவர்கள் இன்பத்திலும், துன்பத்திலும் ஸஹாபாக்கள் என்கின்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்கள்.

*05.12.25* வெள்ளிக்கிழமை மாலை அஸர் தொழுகைக்குப் பிறகு JAQH பாலசமுத்திரம் கிளையின் சார்பாக பாலசமுத்திரம் பள்ளிவாசல் அருகில் தெருமுனை பிரச்சாரம் நடைபெற்றது. இதில் மௌலவி M. அய்யூப் அலி ஃபைஜி (இஸ்லாமிய அழைப்பாளர் JAQH தென்காசி) அவர்கள் பெற்றோர்களே! பிள்ளைகளிடம் நீதமாக நடந்து கொள்ளுங்கள் என்கின்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்கள்.

*07.12.25* ஞாயிற்றுக்கிழமை மாலை அஸர் தொழுகைக்குப் பிறகு JAQH பழநி கிளையின் சார்பாக கோட்டை மேட்டுத் தெருவில் வைத்து மார்க்க விளக்க தெருமுனை பிரச்சாரம் நடைபெற்றது. இதில் மௌலவி ஹாபிழ் A. ஹாலித் ஃபைசல் ஃபிர்தௌசி (இமாம் மஸ்ஜிதுர் ரஹ்மான் பழநி) அவர்கள் சோதனை என்கின்ற தலைப்பில் சிறப்புரையாற்றி னார்கள்.

*12.12.25* வெள்ளிக்கிழமை காலை *7:00* மணி முதல் திண்டுக்கல் காமராஜர் பேருந்து நிலையத்தில் சமூக சீர்திருத்த பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் போதை ஒழிப்பே சமூக பாதுகாப்பு, அலைப்பேசியால் ஏற்படும் விபரீதங்கள் என்கின்ற தலைப்பில் துண்டு பிரசுரங்கள் மற்றும் இஸ்லாம் சம்பந்தமான புத்தகங்கள் வழங்கப்பட்டு சமூக சீர்திருத்த பணி மேற்கொள்ளப்பட்டது.

*12.12.25* வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்கு பிறகு ரஜப் மாதத்தில் நடைபெறும் பித்அத்தான காரியங்கள் குறித்து துண்டு பிரசுரங்கள் திண்டுக்கல் நகரின் உள்ள அனைத்து பள்ளிவாசல் களிலும் வினியோகிக்கப்பட்டது.

*12.12.25* வெள்ளிக்கிழமை மாலை மஃரிப் தொழுகைக்கு பிறகு திண்டுக்கல் மானா மூனா பள்ளிவாசல் அருகில் மார்க்க விளக்க தெருமுனை பிரச்சாரம் நடைபெற்றது. இதில் சகோதரர் இஸ்மாயில் (இஸ்லாமிய அழைப்பாளர்

JAQH கோவை) அவர்கள் சீரழியும் இளைஞர்களும், சீர்திருத்தும் இஸ்லாமும் என்கின்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்கள்.

*13.12.25* சனிக்கிழமை திண்டுக்கல் JAQH கிளையின் சார்பாக மஃரிப் தொழுகைக்குப் பிறகு மஸ்ஜிதுத் தக்வா பள்ளிவாசலில் வைத்து இறை இல்லத்தில் மார்க்க அமர்வு சிறப்பாக நடைபெற்றது. அதில் மௌலவி அப்பாஸ் அலி ஃஸாதி (இஸ்லாமிய அழைப்பாளர் மதுரை) அவர்கள் விண்ணுலக பயணமும் அதில் நாம் பெற வேண்டிய படிப்பினைகளும் என்கின்ற தலைப்பில் வகுப்பு நடைபெற்றது இதில் திரளாக ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர்.

*14.12.25* ஞாயிற்றுக்கிழமை மாலை அஸர் தொழுகைக்குப் பிறகு JAQH பழனி கிளையின் சார்பாக கோட்டைமேடு தெரு, தைக்கா தோட்டம் அருகில் வைத்து மார்க்க விளக்க தெருமுனை பிரசாரம் நடைபெற்றது. அதில் மௌலவி A. ஹாலித் ஃபைசல் பிர்தௌஸி அவர்கள் முன்மாதிரி இளைஞர்கள் என்கின்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்கள்.

பிரதி வாரம் புதன்கிழமை காலை ஃபஜர் தொழுகைக்கு பிறகு மஸ்ஜிதுர் ரஹ்மான் பள்ளியில் அகீதா வகுப்பு தொடராக நடைபெற்று வருகிறது.

## கோவை மாவட்டத்தில் நடைபெற்ற பணிகள்

*07.12.2025* ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி முதல் மஸ்ஜிது ஸலஃபுஸ் ஸாலிஹீனில் ஆனைமலையில் வைத்து இறை அருளும் அவனுடைய கோபமும் என்ற தலைப்பில் மௌலவி உமர் அலி ஃபிர்தவ்ஸி அவர்கள் சிறப்பு வகுப்பு நடத்தினார்கள்.

*23.11.2025* ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு கோவை மஸ்ஜிதில் முபஷ்ஷிரில் "நெருப்பினால் ஆன படைப்பு" ஜின்கள் குறித்த சரியான நம்பிக்கை என்ற கருப்பொருளில் மௌலவி அப்பாஸ் அலி அவர்கள் ஜின்கள் எவ்வாறு படைக்கப்பட்டது, ஜின்களின் ஆற்றல் என்ன, ஜின்களை வசப்படுத்த முடியுமா? ஜின்கள் மனித உடலில் போகுமா ஜின் வைத்தியம் உண்டா, ஜின்னிடம் உதவி தேடலாமா, ஜின்களால் மனிதனுக்கு உதவ முடியும் உதவ முடியுமா? ஜின்களை பற்றிய தவறான நம்பிக்கைகள் மற்றும் அச்சங்கள் குறித்து குர்ஆன் மற்றும் ஹதீஸ் அடிப்படையிலான விளக்கம் பெறும் ஓர் சிறப்பு கல்வி அமர்வு நடைபெற்றது.

*21.11.2015* வெள்ளிக்கிழமை மாலை கோவை மஸ்ஜிதுர் ரஹ்மான் அல்அமீன் காலனியில் மார்க்க விளக்க பொது நிகழ்ச்சி நடைபெபெற்றது. இதில் தலைமை: மௌலவி இப்ராஹிம் பிர்தவ்ஸி அவர்களும் மௌலவி மதர்ஷா பிர்தவ்ஸி ஈமானிய வழித்தடங்கள் என்ற தலைப் பிலும் மௌலவி இக்பால் பிர்தவ்ஸி அன்பு கணவரும் ஆருயிர் மனைவியும் என்ற தலைப்பிலும் உரை நிகழ்த்தினார்கள்.

*21.11.2025* வெள்ளிக்கிழமை மாலை 4:45 மணி மணிக்கு கோவை திருமறை நகரில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் முபஷ்ஷிரில் பெண்களுக்கான சிறப்பு பயான் நடைபெற்றது இதில் குமரி மாவட்ட தலைவர் ஹாஜா ஷேக் மிஸ்பாஹி அவர்கள் அவர்கள் சிறப்பு பயான் நடத்தினார்கள்.

*22.11.2025* மஸ்ஜிதுல் அன்சார் மர்கஸில் ஏகத்துவக் கொள்கையும் சமூக நிலையும் என்ற தலைப்பில் மாநிலப் பொதுச் செயலாளர் ரஹ்மத்துல்லாஹ் ஃபிர்தவ்ஸி அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்கள். திரளாக மக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

*23.11.2025* ஞாயிற்றுக்கிழமை மாலை *4:30* மணி அளவில் மௌலவி அப்பாஸ் அலி அவர்கள் இப்லீஸ் செய்யும் குழப்பங்கள் என்ற தலைப்பில் ஆனை மலை மஸ்ஜிது ஸலஃபுஸ்ஸாலிஹீனில் வைத்து ஒரு சிறப்பு பெண்கள் நிகழ்ச்சி நடத்தினார்கள்.

## திருப்பூர் மாவட்டத்தில் நடைபெற்ற பணிகள்

*07.12.2025* ஞாயிற்றுக்கிழமை காலை *8.30* மணி அளவில் திருப்பூர் அண்ணா நகர் யிகினிபி கிளை மஸ்ஜிது தவ்பா பள்ளிவாசல் சார்பாக சிறப்பு தர்பியா வகுப்பு சிறப்பாக நடைபெற்றது இந்த வகுப்பில் மௌலவி MS.சதக்கத்துல்லா உமரி அவர்கள் அழைப்புப் பணியின் அவசியம் என்ற தலைப்பிலும் மௌலவி A. அன்சாரி பிர்தௌசி அவர்கள் கனமான ஈமானும் கண்டுகொள்ளாத மக்களும் என்ற தலைப்பில் எந்த தலைப்பிலும் உரை நிகழ்த்தினார்கள் இதில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள்.

## நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்ற பணிகள்

*12.12.2025* வெள்ளிக்கிழமை மாலை *8* மணிக்கு ஊட்டி டேவிஸ் டேல் பகுதியில் அமைந்துள்ள மஸ்ஜிதில் ஃபிர்தௌசில் வைத்து ஹஜ்ஜத்துல் வதா (இறுதிப் பேருரை) என்ற தலைப்பில் மௌலவி காஜா முஹைதீன் ஃபிர்தௌசி அவர்கள் வகுப்பு நடத்தினார்கள்.

*23.11.2025* ஞாயிற்றுக்கிழமை மாலை *3:30* மணி முதல் *5:30* மணி வரை குன்னூர் மஸ்ஜிதில் ஜன்னத்தில் வைத்து சிறப்பு பயான் நிகழ்ச்சி பெண்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது இதில் சிறப்புரையாளர்களாக மௌலவி இக்பால் ஃபிர்தவ்ஸி அவர்களும் மௌலவி மதர்ஷா ஃபிர்தௌசி அவர் களும் உரை நிகழ்த்தினார்கள்.

## மதுரை மாவட்டம் இஸ்லாமிய வழிகாட்டி மையம் சார்பாக

இன்று ஜும்ஆ தொழுகைக்கு பிறகு மாவட்ட தலைமை மர்கஸ் மஸ்ஜித் தவ்ஹீதில்...

*12.12.2025* மதுரை அரசரடியில் உள்ள



இறையியல் கல்லூரி மாணவ, மாணவி களுக்கு இஸ்லாம் கூறும் கிறிஸ்தவம் என்ற தலைப்பில் மௌலவி பஷீர் ஃபிர்தவ்ஸி அவர்கள் கிறிஸ்தவம் எவ்வாறு உருவானது யாரால் தோற்று விக்கப்பட்டது என்பதை மிகவும் சிறப்பாக தெளிவுபடுத்தினார்கள்.

*14.12.25* திருமங்கலம் மஸ்ஜித் தக்வாவில் மஃரிப் தொழுகைக்கு பிறகு நடந்த சிறப்பு தர்பியா வகுப்பில் மௌலவி பஷீர் ஃபிர்தவ்ஸி அவர்கள் முன்மாதிரி இஸ்லாமிய குடும்பம் என்ற தலைப்பில் வகுப்பு நடத்தினார்கள்.

## சென்னை மாவட்டத்தில் நடைபெற்ற பணிகள்

*30.11.2025* ஞாயிற்றுக்கிழமை மாலை மஃரிப் தொழுகைக்குப் பிறகு சென்னை தாங்கல் மஸ்ஜிதுல் சஹாபாவில் வைத்து

ஒரு முஸ்லிமின் வாழ்க்கை பயணம் என்ற தலைப்பில் மௌலவி முஃப்தி உமர் ஷரீஃப் காசிமி உரை நிகழ்த்தினார்கள்.

23.11.2025 தாம்பரம் ரங்கநாதபுரம் மஸ்ஜித் தவ்ஹீதில் வைத்து மாலை மஃரிப் தொழுகைக்குப் பிறகு மௌலவி தர்வேஸ் ஹசனி அவர்கள் நபிகளார் கற்றுத் தந்த நற்பண்புகள் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள்.

## திருச்சி மாவட்டத்தில் நடைபெற்ற பணிகள்

8. 12. 2025 காலை 10 மணி அளவில் திருச்சி ஏர்போர்ட் அருகில் அமைந்துள்ள அல்ஹுதா மேல்நிலைப் பள்ளி மற்றும் இஸ் இஸ்லாஹிய்யா அரபிக் கல்லூரி சார்பாக போதை ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பேரணி புதுக்கோட்டை ரோடு ராசி மகாலி லிருந்து அல்தாஹுா வளாகம் வரை நடைபெற்றது இதில் திருச்சி அல்ஹுதா ஆர்பனேஜ் மாணவர்களும் மாணவி களும் எஸ் எஸ் வி துவக்கப்பள்ளி மாணவ மாணவிகளும் இஸ்லாஹிய்யா அரபிக் கல்லூரி மாணவிகளும் கலந்து கொண்டார்கள்.

## தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற பணிகள்

27.10.2025 தென்காசி JAQH ஜமாஅத்தின் சார்பாக நடைபெறும் அல் முஸ்லிமீன் குர்ஆன் மனன பள்ளியில் ஜமாஅத்தின் முன்னாள் மாநில தலைவர் அஷ்ஷேய்க் S. கமாலுத்தீன் மதனி அவர்கள் பார்வையிட்டு மாணவர்களின் குர்ஆன் மனன திறனை ஆய்வு செய்து மேலும் மேம்படுத்த ஆலோசனை வழங்கி னார்கள்.

23.11.2025 ஞாயிறு காலை 10 மணிமுதல் 1 மணி வரை அல் முஸ்லிமீன் மழலையர் பள்ளிக்கூடத்தின் மாணவ மாணவிகளின் நிகழ்ச்சி மற்றும் பெற்றோர் நிர்வாக கலந்தாலோசனை நிகழ்ச்சி நடைபெற்றது இதில் பள்ளியின் தாளாளர் M.P. உஸ்மான் ஃபிர்தவ்ஸி அவர்கள் மற்றும் கிளை தலைவர் சுலைமான் ஃபிர்தவ்ஸி அவர்கள் மற்றும் நிர்வாகிகள் பெற்றோர் களின் ஆலோசனைகளையும் கருத்துக் களையும் கேட்டறிந்தார்கள் இறுதியில் மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு நன்றியுரை கிளை செயலாளர் முஹம்மது இஸ்மாயில் வழங்கினார்.

30.11.2025 அன்று மஸ்ஜித் தவ்ஹீத் பள்ளியின் முதல் தளத்தில் வைத்து காலை 10 மணிமுதல் 1 மணி வரை மாநில அமைப்பு செயலாளர் அன்சாரி ஃபிர்தவ்ஸி அவர்கள் மறுமை விசாரணை என்னும் தலைப்பின் கீழ் வகுப்பு நடத்தினார்.

30.11.2025 அன்று சமூக சீர்திருத்த தெருமுனை பிரச்சாரம் தவளபுரம் பள்ளி வாசல் அருகில் வைத்து மஃரிப் தொழுகைக்கு பிறகு நடைபெற்றது இதில் மாநில துணைத் தலைவர் M.P.உஸ்மான் ஃபிர்தவ்ஸி, மாநில அமைப்பு செயலாளர் அன்சாரி ஃபிர்தவ்ஸி அவர்கள் உரை நிகழ்த்தினார்கள்

அல் முஸ்லிமீன் ஹிஃப்ளு மதரஸாவில் பயின்று வரும் மாணவர் முஸ்லீம் (தென்காசி JAQH கிளை/மாவட்ட தலைவர் சுலைமான் ஃபிர்தௌஸி அவர்களின் மகன்) அவர்கள் திருக்குர்ஆனை முழுவதுமாக மனனம் செய்து முடித்துள்ளார் ஜமாஅத்தினர் முன்னிலையில் மாணவரை பாராட்டி பரிசுகளை மாநில துணைத் தலைவர் உஸ்மான் ஃபிர்தவ்ஸி அவர்கள் வழங்கினார்.

அன்புள்ள கொள்கைச் சகோதரர்களுக்கு...

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)..

எல்லாம் வல்ல அல்லாஹ், நம் எல்லோரையும் எல்லாவிதமான தீய சக்திகளில் இருந்தும் பாதுகாப்பானாக. இந்த நாட்டில் வாழக்கூடிய இஸ்லாமியர்களை குறி வைத்து அவர்களை ஒழித்துக் கட்ட வேண்டும், அவர்களை நாடற்றவர்களாகவும் அதிகாரமற்றவர்களாகவும் ஆக்க வேண்டும் என்ற நீண்ட நெடிய காலத்திட்டத்தை படைத்தவனின் விரோதிகள், மனிதநேய எதிரிகள் மூர்க்கத்தனமான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்று வதற்காக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி அதன் மூலம் இந்த நாட்டின் பூர்வீக குடிமக்களான முஸ்லிம்களின் அடையாளங்களை துடைத்தெறியும் பணியை மேற்கொண்டு வருகின்றனர். இந்தத் திட்டம் நாடு முழுக்க செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. வட மாநிலங்களில் உள்ள முஸ்லிம்கள் இந்தத் தீய சக்திகளின் கொடுமைகளில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றனர். சில மாநில ஆட்சியாளர்கள் தங்கள் மாநிலத்தில் உள்ள முஸ்லிம்களின் வழிபாட்டுத் தலங்களை பகிரங்கமாக தகர்த்துக் கொண்டிருக்கின்றனர். அப்பாவி மக்களின் குடியிருப்புகளை தகர்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த அநியாயங்களை எல்லாம் அவர்கள் முஸ்லிம்களாக இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காகவே அரங்கேற்றப்படுகிறது. படைத்த இறைவன் ஒருவனை மட்டுமே கடவுளாக நம்பி ஏற்றிருக்கின்ற மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இதுபோன்ற சதிகளில் இருந்து எல்லாம் வல்ல அல்லாஹ் இந்தச் சமூகத்தை பாதுகாக்க வேண்டும். எதிரிகளின் அடக்குமுறைகளை ஒடுக்க வேண்டும். இந்த நாட்டின் பூர்வீக குடிமக்களான நமக்கு பாதுகாப்பை வழங்க வேண்டும் என வல்ல அல்லாஹ்விடம் இடைவிடாது பிரார்த்தித்துக் கொண்டிருப்போமாக.. அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமைகளை சரியாக நிறைவேற்றி வாழ்வோமாக.. நம்மை எதிர்கொள்கின்ற அனைத்துத் தீய சக்திகளையும் ஒருங்கிணைந்து ஒற்றுமையுடன் ஒன்றுபட்டு எதிர்கொள்ள பாடுபடுவோமாக சமூகத்தில் உள்ளே உள்ள குறைபாடுகளை ஒதுக்கி வைத்து விட்டு பொது எதிரியை எவ்வாறு அடக்குவது என்பதை இலக்காக கொள்வோமாக..

உங்கள் நலன் நாடும்

**S. கமாலுத்தீன் மதனி**

Owned and Published by S.Kamaludeen from No.61/26, Ayyasamy Street, Pudupet, Chennai - 600002.
Printed by Iqbal Khan at Graphics Park, No.78, Big Street, Chennai - 600005. Editor : S.Kamaludeen